# சிரித்திரன்



CHIRITHIRAN

A CARTOON MAGAZINE

ஆனி 1970

*With best Compliments*

*of*

**V. M. RASALINGAM & CO.**

IMPORTERS, WHOLE SALE & RETAIL DEALERS IN
CURRY STUFFS ETC.


**No: 23, 5th Cross Street, Colombo - 11.**



'நான் பிறந்த நாட்டுக் கெந்த நாடு பெரியது.'




'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்'





'வாங்க வாங்க வாத்தியாரையா வரவேற்க வந்தோமையா.'




'வீடு நோக்கி ஓடிவந்த என்னையே, நாடி நிற்குதே அனேக நன்மையே!'

## மைனர் மச்சான்

மாயன்




## — பரிசுக் கவிதை —

[சிரித்திரன் நடாத்திய 'வானொலி புத்தாண்டுக் கவிதை' போட்டியில், இரண்டாவது பரிசாகிய ரூபா 10/- ஐ பெறும் கவிதை ]

பெட்டைக் கோழியொன்று- தன்
செட்டை யுதிர்த் ததாம்!
பெட்டைகள் கட்டை மினிச்
சட்டை அணியக்கண்டு - தான்
செட்டை யுதிர்த் தேனெனச்
சேவலிடம் உரைத் ததாம்!

— கருணை யோகன், கரணவாய் தெற்கு, கரணவாய்.

\+

[மூன்றுவது பரிசாகிய ரூ 5/-ஐ பெறும் கவிதை]


கயலை யொத்த விழியை
உடைய காரிகை யொருத்தி
புயலை யொத்த வேகம்
உடைய புகையும் வண்டியில்
எனக்கு முன்னே ஒயிலாய்
அமர்ந்து புன்னகை பூத்தாள்.
கணக்கு போட்டேன்; காதலென
கேட்டேன் அவள் பெயரை
சிரித்த தந்தை அவள்
ஊமையென்று விரித்த போது
விரித்த வாயை உடனே
மூடி கவிழ்த்தேன் தலையை

—தென்னையூர் ஜாபிர், 72, ஒருவியத்தை வீதி, பொல்காவெல.

---

சிரித்திரனில் வெளியாகும் கதைகளிலுள்ள பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே· கட்டுரைகளில் வரும் அபிப்பிரா யங்களுக்கு நாம் பொறுப்பல்ல.

---




**பரிசு பெறும் கேள்வி**

**எஸ்.கே. குமார், கண்டி றேட், பரந்தன்.**

கே: அபேட்சகர்களை ஊர்வலமாக அழைத்துச் செல்வதன் காரணமென்ன?

ப: அவர்கள் போட்டியிடும் தொகுதியை அவர்களுக்குக் காட்டுவதற்காக.

**சுமதிசுந்தர், 174/65, மல்கடுவாவ, குருநாகல்.**

கே: கணவன்மாரை ஆட்டிப் படைக்கும் மனைவிமாருக்கு என்ன கொடுக்கலாம்?

ப: தங்கத்தால் ஜால்ரா (தாளம்) செய்துகொடுக்கலாம்.

— — —

**ம. சிவகுமாரி, பஸில்ஸ் லேன், வெள்ளவத்தை.**

கே: அன்றைய மனிதனுக்கும், இன்றைய மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அன்றைய மனிதன் பன்றி வேட்டை ஆடினான். இன்றைய மனிதன் பதவி வேட்டை ஆடுகிறான்.

— — —

**அளவையூர் அழகுராஜா.**

கே: தமிழ் தெரியாத தமிழ் எம்.பி.யால், தமிழுக்குத் தொண்டு செய்ய முடியுமா?

ப: முடியுமே! இவர்கள் தமிழுக்குத் தொண்டு செய்யாமல் இருப்பதே பெருந்தொண்டு.

— — —

**ப. கபிரியேற்பிள்ளை, பெரிய கட்டைக் காடு.**

கே: முப்பதாம் நூற்றாண்டில் உலக நாகரீகம் எப்படியிருக்கும்?

ப: ஆடை அணிந்த பெண் உருவம், நூதனசாலைகளில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கும்.

— — —

**கேணிபாலன், நெடுங்கேணி.**

கே: ஆலயம் தொழுவது வேலை மினக்கேடா?

ப: வேலை இருந்தால்தானே வேலை மினக்கேடு. இது வேலை இல்லாத் திண்டாட்ட காலம் தம்பி.

கே: அன்பின் மகுடியாரே! இக்கால அரசியல் தலைவர்களுக்குப் பதவி மோகம் அதிகமா?

ப: பதவிமோகமில்லாமல், உம்மையும் எம்மையும் போன்ற பாவிகளில் மோகமென்று நினைத்தீர்.

**கே. இராசதுரை, வதிரியூர்.**

கே: தமிழ்த் திரைப்படங்களில் முத்தமிடும் காட்சிகளை அனுமதிக்கலாமா?

ப: 'முழுக்க முழுக்க நனைந்தவனை, பனியில் நனைய விடலாமா?' என்ற கேள்வி போலிருக்கிறதே!

— — —

**எஸ். ஜமால்டீன், மத்திய வீதி, மூதூர்-4.**

கே: ஆண்களுக்காகப் பெண்கள் வாழ்கிறார்களா; அல்லது பெண்களுக்காக ஆண்கள் வாழ்கிறார்களா?

ப: பெண், ஆணுக்காகவும்; ஆண், பெண்ணுக்காகவும் வாழ்கிறார்கள். பெண், சீதனத்தைக் கொடுக்கிறாள்; ஆண், மாதச் சம்பளத்தைக் கொடுக்கிறான்.

— — —

**சி. மாலினி, பதுளை.**

கே: 'சாதி இரண்டொழிய வேறில்லை' அவ்விரு சாதிகளும் யாதோ மகுடி அண்ணாவே?

ப: சுரண்டும் சாதி; சுரண்டப்படும் சாதி.

— — —

**கே. என். ராஜன், நாச்சிமார் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**

கே: கொள்ளைக்காரனின் மூளையை சி.ஐ.டி.க்கும், சி.ஐ.டியின் மூளையை கொள்ளைக்காரனுக்கும் பொருத்தினால்.


ப: ஆஹா வாரும் பிள்ளாய் ராஜாதி ராஜனே!... சேவகனின் மூளையை உமக்குப் பொருத்தினால் நீர் செங்கோல் பிடிப்பீரா... இல்லை ஆலவட்டம் பிடிப்பீரா?


— — —

**பி. குழந்தைவேலு, ஹைலன்ஸ் கல்லூரி, ஹட்டன்.**

கே: மனிதன் சாகும்போது என்ன நினைப்பான்?

# சுழல் கேடயம்




விசித்திரமான பேர்வழிகளின் விசித்திரமான போட்டி இது!

மன்னர் பூபாலரை ஒரு தனிக் காட்டு ராஜா என்று சொல்லலாம். ஒரு குட்டி நாடாகவே இருந்த அவருடைய ராச்சியத்தில் வேறு எந்த நாடுகளும் தலையிடுவதில்லை.

அவருடைய நாட்டில் நடைபெறும் சம்பவங்களும் விசித்திரமானவை.

இன்று நடைபெறும் போட்டியும் அவ்விதமானதே! நான்கு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று ஓட்டப்பந்தயம் நடத்தின.

விமானம் ஓட்டி அனுபவம் பெற்றவர்களால் தான் அவ்விதம் விமானங்களை ஓட்ட முடியும் என்று சொல்லும் அளவிற்கு விமானங்கள் நான்கும் பறந்து கொண்டிருந்தன.

யாரும் தோற்கவில்லை. ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்பதைப் போன்று நால்வருமே

---

ப: கிழிந்த மருத்துவ விஞ்ஞானத்தால் தன்னைக் காப்பாற்ற முடியவில்லையே என்று நினைப்பான்.

— — —

**அ. சுகராசா, 80 இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.**

கே: இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் ஒன்றுசேர்ந்தால்?

ப: யாழ்ப்பாணத்தில் மாங்கன்றைத் தான் ஒட்ட முடியும்! மனிதக் கட்சிகளை ஒட்டவே முடியாது தம்பி.

— — —

**எச். எம். அனஸ், சோனகத் தெரு, யாழ்ப்பாணம்.**

கே: 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா' என்பதன் கருத்து என்ன?

ப: புதைபொருள் ஆராய்ச்சி போதும்; விண்வெளியை நிமிர்ந்து பார்' என்பதுதான் போலும்!

— — —

**மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு.**

கே: நான் பிரதம மந்திரியாக வந்தால்?

ப: ஆலையில்லா ஊருக்கா?

— — —

**சி. சண்முகசுந்தரம், மீசாலை.**

கே: சாதி வெறியினருக்குத் தர்ம சிந்தனையுண்டா?

ப: உண்டு... கோத்திரமறிந்து பிச்சை போடுவான்.

— — —

**க. தேவமனோகரன், பலாலி.**


கே: மின்சாரத்துக்கும் மினிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: ஒன்று தொட்டால் 'ஷொக்' அடிக்கும்; மற்றது தொடாமலே 'ஷொக்' அடிக்கும்.

— — —

**எம். ஏ. தாஹா செய்யினுடீன், சின்னப் பள்ளி, தெற்கு வீதி, அக்கரைப்பற்று.**

கே: மஹாவலியைத் திசை திருப்பும் திட்டம், அரசாங்கம்




வெற்றியைப் பெற்றனர்.

மன்னர் பூபாலருக்கோ திருப்தியில்லை. தன்னுடைய மகளை மணந்துகொள்பவன் ஒரு வீரனாகவே இருந்துவிடவேண்டுமென்பதை விரும்பிய அவர் ஒரு வீரனையே தெரிந்தெடுக்க முடிவு கொண்டார்.

தொடர்ந்து—

இன்னொரு போட்டியையும் அறிவிக்கிறார்.

தன்னுடைய சுழல் கேடயத்தை அப்போட்டியில் சம்பந்தப்படுத்துகிறார். சுழல் கேடயம் என்பது பல கோடி ரூபாய் செலவில் ஆன ஒரு கேடயம். அதில் உள்ள மர்மம் என்ன தெரியுமா?

இதுவரையில் வெளியுலகினர் எவருமே அதைப் பார்க்கவில்லை. அதை வைத்திருப்பவர்களுக்குப் பல அதிர்ஷ்டங்கள் தேடிவரும் என்றும் பலரால் நம்பப் பட்டது.

[தொடரும்]

---

நினைத்தபடி முப்பது ஆண்டுகளில் பூர்த்தியாகிவிடுமா?

ப: ஆஹா... தாஹா... இது என் பேரப்பிள்ளையைக் கேட்க வேண்டிய கேள்வி.

— — —

**பேசில் பெர்னாண்டோ, 82/4, செக்கடித் தெரு, கொழும்பு-13.**

கே: கடவுள் எப்போது கண்களை மூடிக்கொள்கிறார்?

ப: மனிதனின் அகக் கண் திறக்கும் போது.

— — —

**இ. புவனேஸ்வரி, பளை.**

கே: ஏழைப் பெண்களை, இழிவாகச் சிலர் பேசுவதன் காரணமென்ன?

ப: பணக்காரப் பெண்களைப் பற்றிப் பேசினால் பல்லை உடைத்து விடுவார்கள் என்ற பயத்தால்.

— — —

**எஸ். எம். எம். ஜப்பார், 23, மாத்தளை வீதி, அக்குரணை.**

கே: ஈழநாட்டில் சிலர் பணத்துக்காகத் தமது வாக்கை அளிக்கிறார்களே! இதை என்னவென்பது?

ப: அதைத் தான் SELLவாக்கு என்பது.

— — —

**வி. தாமோதரம்பிள்ளை, 92 ஸ்டேஷன் வீதி, நுகேகொடை.**

கே: அரசாங்கத்தால் இளம் கலைஞர்களுக்கு உதவி செய்ய முடியுமா?

ப: அரசாங்கம் கவலையை வளர்ப்பதன்றி கலையை வளர்ப்பதில்லையே!

மகுடி,

மே/பா. ''சிரித்திரன்''

101/4, செள். பெனடிக்ஸ் வீதி

கொட்டாஞ்சேனை.

இதை வெட்டி ஒட்டப்பட்டு வரும் கேள்விகளே ஏற்றுக்கொள்ளப்படும். சிறந்த கேள்விக்கு செல்வி. எஸ். மாலா அவர்கள் ரூபா 5/- பரிசு வழங்குவார்கள்.

# தமிழினம் ஒதுக்கப்படுகின்றதா?

தமிழனுக்கென்று ஒரு நாடு இல்லை. சுதந்திரமான ஆட்சி இல்லை. அவன் எங்கும் சிறுபான்மையினமாகவே வாழ்கின்றான். இலங்கையைப் பொறுத்தவரை தமிழினம் சிறுபான்மையினமாகி அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டே வாழ்கின்றது.

நம்மினம் மற்ற இனத்தால் ஒதுக்கப்படுவதைவிட, தன்னைத் தானே ஒதுக்குகின்றது என்று சொல்வதுதான் பொருந்தும். நம்மை நாமே ஒதுக்குகின்றோம். சிலரை ஒதுக்கி வைத்தே வாழ்கிறோம். நமக்குள் எத்தனை சாதிகள், பிரிவுகள், கட்சிகள். எம்மவருள் ஒரு பிரிவினரை ஆலயங்களுக்குள் விட மறுக்கிறோம். தமிழினம், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் கருத்துரைக்கிணங்க வாழ்ந்த இனம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பொன்னுரையைத் தந்த, கணியன் பூங்குன்றனாரைப் பெற்ற இனம், நம் தமிழினம். இன்று மற்ற இனத்தவர் எள்ளி நகையாடும் வகையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமக்குள் ஒற்றுமையில்லை! எமக்குள்ளிருக்கும் ஒதுக்கல் பிரச்சனையை இன்னும் நாம் தீர்க்கவில்லை. இந்த மனப்போக்கு இருக்கும் போது 'நாம் இன்னொரு இனத்தால் ஒதுக்கப் படுகின்றோம்' என்று சொல்வது எவ்வளவு பேதமை. 'உட் சுவர் தீற்றிப் புறச் சுவர் தீற்று!' —இதுவே வழக்கம். எனவே நாம் எமக்குள்ளிருக்கும் ஒதுக்கற் பிரச்சினையைத் தீர்ப்பது அவசியமாகிறது.

முதலில் நமக்குள்ளிருக்கும் போட்டி பூசல்களை ஒழித்தாக வேண்டும். என்று, நாம் எமது வேற்றுமைகளை மறந்து ஒற்றுமைப்படுகின்றோமோ, அன்றே எமக்கு விடிவு காலம்! இதை, ஈழத்தமிழ் இளைஞர்கள் யாவரும் நன்கு உணர வேண்டும். வருங் காலம் நம்முடையது; அதை நாமே செப்பனிட வேண்டும்; அதற்கான வழி வகைகளை நாமே வகுக்க வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு ஈழத்தமிழ் இளைஞன் நெஞ்சிலும் பசுமரத்து ஆணி போல் பதிய வேண்டும். இதற்கு இளைஞர் இயக்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டும். அவ்இயக்கம், எவ்வித அரசியல் கட்சிகளையும் சாராது, தனிவழி நின்று சாதனைகளைப் புரிவதாக இருக்கவேண்டும். நமக்குள்ளிருக்கும் ஒதுக்கல் பிரச்சனையை முதலில் தீர்க்க வேண்டும். இப்பொறுப்புள்ள பணி, இளைஞர்களின் கையிலேயே உள்ளது. இளைஞர்களின் எழுச்சியால் பல நாடுகளின் சரித்திரங்கள் மாற்றப்பட்டதை நாம் அறிவோம். எனவே அரசியல் சார்பற்ற இளைஞர் படை ஒன்று உருவாக வேண்டும் தமிழினத்தின் ஒதுக்கல் பிரச்சனை தீர, இதுவே சிறந்த வழி!

இது போன்ற பிரச்சனைகளை அலசி ஆராய, களம் அமைத்துக் கொடுத்த சிரித்திரனுக்கு எனது நன்றி.

—புலோலியூர் பார்த்திபன்

—□—

காலம் கடந்த கேள்வியிது. அத்தோடு, இன்றும் தமிழினம் ஒதுக்கப்படுகின்றதா என்றகேள்வியில் தொக்கி நிற்கும் கருத்தை எண்ணாமலிருக்கவும் முடியாது. ஒதுக்கப்படவில்லை என்று எண்ணும் தமிழரும் உளர் போலும்!

தமிழினம் ஒதுக்கப்படுவதோடு மட்டுமன்றி, தன்னைத் தானேயும் அது ஒதுக்கிக் கொள்கின்றது. தன் இனத்தின் ஒரு பகுதியையே ஒதுக்கிப் பலமிழந்து நிற்கிறது. தன் மொழியாம் தெய்வத் தமிழ் மொழியினை, என்றோ ஆலயங்களிலிருந்து ஒதுக்கி, பின் இல்லங்களிலிருந்து ஒதுக்கி, இப்போது கை, வாயினின்று கூட ஒதுக்கி விடுகின்றது. தன் பண்பாடுகளையும் ஒதுக்கி வருகிறது.

இன்னும் நூறு வருடங்களில், தமிழர்கள் ஈழத்தில் இருந்தார்களா என்று புதை பொருள் ஆராய்ச்சி செய்யும் நிலை ஏற்பட்டால், இருந்தார்கள் என்பதற்கான பொருட்களோ, தடயங்களோ அகப்பட மாட்டாது.

ஈழத்தில் ஆங்கிலேயர், வங்காளிகள், இந்துஸ்தானிகள், ஜிப்பியினர், மலையாளத்தார், பர்மாவினர் இருந்ததற்கான அத்தாட்சியைக் காண்பாரேயன்றி, தமிழரிருந்ததற்கான- அவர்களணிந்த ஆடை, ஆபரணங்களைக்கூடக் காணாது தவிப்பர்.

தாம் ஒதுக்கியவைகளை மீண்டும் தம்முளொன்றாக்கி, தன்மானம் பெற்று, 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என்ற ஞானோதயம் வரப்பெற்று நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்டு ஒவ்வொரு தமிழனும் செயல் படத் தொடங்கும் நாளே, தமிழினம் ஒதுக்கப்படா நல்ல நாளாக அமையும்!

—செல்வி. சத்தியபாமா சதாசிவம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

—□—

பெரும்பான்மை, சிறுபான்மை எனும் அரசியற் பிரச்சினையை அந்நியர்கள் கிளப்பி வைப்பதற்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்குமுன்பே தமிழினம் இங்கு தனிச் சிறப்புடன் வாழ்ந்திருக்கிறதென்பதை சரித்திர, வரலாற்று ஆசிரியர்கள் பலரொப்புக் கொண்டிருக்கிறார்கள்.

---

**ஒருவர்:** ஏன்ரா தம்பி, சின்னையாவின் மகளின் கல்யாணம் நின்டுபோச்சாம்

**மற்றவர்:** கட்சிப் பொருத்தம் இல்லையாமண்ணை... ... அவள் தமிழரசாம்; அவன் காங்கிரசாம்.

—திக்கம் இருப்பன்

பேச்சாளர்: ஏன் சார், என் பேச்சைக் குறையிலே நிறுத்திட்டீங்களே......

தலைவர்: சனங்கள் எழுந்து போகமுன், நாமும் ஏதாவது பேச வேண்டுமல்லவா...

பேச்சாளர்: ?...?...?...

—விஸ்வநாதன் - தாமோதரம்பிள்ளை.

தமிழினம் இலங்கையைப் பல ஆண்டுகளாக ஆட்சி செலுத்தி வந்திருக்கிறது என்பதற்குரிய சரித்திர சான்றுகள் இன்றும் யாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அந்நியர் வந்திங்கு காலடி எடுத்து வைக்கும்போது கூட தமிழினம் அரசுகட்டிலிருந்திருக்கிறது என்பது, மறைக்க முடியாத வரலாற்றுண்மையாக இருக்கிறது.

இலங்கையின் கலை வளர்ச்சிக்குக்கூட தமிழினம் பன்னெடுங் காலந்தொட்டே தனது பங்கினை உதவி வந்திருக்கின்றது. சிற்பக் கலையிலும் தமிழ்க் கலைஞர்கள் தங்கள் முத்திரையைப் பொறித்திருக்கின்றனர். சிங்களக் கலைகளின் சிறப்பை உலகறியச் செய்தவர்களில் ஈழத் தமிழரான கலாயோகி ஆனந்த குமார சுவாமி மிக முக்கியமானவரல்லவா?

ஈழத்திருநாட்டின் மூலைப் பலமே இந்தத் தமிழினம் தான் என்று கூறினல் அதனை இங்கு யாருமே மறுக்கத் துணிய மாட்டார்கள். ஏனெனில் அது பல ஆதாரங்களோடு விளங்கும் சரித்திர உண்மையாக இருக்கிறது.

அப்படிப்பட்ட தமிழினம் இன்று எப்படியிருக்கிறது? வெள்ளைக்காரனின் கொம்பனி ஆட்சி நிர்வாகம் இங்கிருந்த மூன்று இராச்சியங்களையும் கைப்பற்றி, அடக்கி' ஒடுக்கி தனது ஒற்றைக் கொடியாட்சியின் கீழ் கொண்டு வந்தான். அந்த அந்நியனுக்கு நம் நாட்டு மக்களின் நலனில் என்ன அக்கறை இருக்கப் போகிறது? நாட்டுக்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டுப் போய்விட்டான். நாடு சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து, தமிழினம் இங்கு எப்படியிருக்கிறது? எண்ணிப் பார்ப்பது சுவையான சிந்தனையாக இருக்கிறது.

ஐ. நா. வின் கலை, கலாச்சார நிறுவனத்தினரின் ஆலோசகர்களில் ஒருவரான செல்வி மிலானு சல்வீனி இலங்கைக்கு விஜயஞ் செய்திருந்தார். இந் நாட்டின் பாரம்பரியக் கலை, கலாசாரம் சம்பந்தமான தகவல்களை சேகரிப்பதற்காகவே இவர் 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் சார்பாக இங்கு வந்திருந்தார். இலங்கையின் சம்பிரதாயக்கலைகளைப் பற்றி அறிந்து அத் தகவல்களையெல்லாம் பேரூட் நகரில் நடைபெறவிருந்த மத்திய கிழக்காசிய நாடுகளின் பாரம்பரியக் கலைகள் சம்பந்தமான வட்ட மேசை மகாநாட்டில் சமர்ப்பிக்கவே மிலானு சல்வீனி இங்கு வந்திருந்தார். இந் நாடு தமிழ், சிங்கள, இஸ்லாமியக் கலாசாரங்கள் நிறைந்த நாடல்லவா?

ஆனல்—

நடந்தது என்ன?

சிங்கள, ஆங்கில நாடகக் கலைஞர்களையும், விமர்சகர்களையும் மாத்திரமே செல்வி மிலானு சல்வீனி சந்தித்துக் கலந்துரையாடும் வாய்ப்பை இந் நாட்டுக்கலாசாரப் பகுதியினர் அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர். தமிழ்ப் பேசும் கலைஞர்கள் யாருமே அவருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப் படவில்லை. இதனை— இலங்கையில் தமிழர் என்ருேரினம் உண்டு என்பதை, இலங்கைக் கலாசாரப் பகுதி மறந்து விட்டது என்று யாம் கொள்வதா? இல்லையேல், அரசியல் அனுதைகளான இலங்கைத் தமிழருக்குக் கலையும், கலாசாரமும் எதற்கென்று இலங்கை கலாசாரப் பகுதி எண்ணி விட்டதென்று யாம் எடுத்துக் கொள்வதா?

ஈழத்துக் கலைகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்க வந்தவருக்குத் தமிழ்க் கலைகளைப்பற்றி அறிவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையென்றுல் அவரின் 'கலை யாத்திரை' பூரண நிலையயடையமாட்டாதென்பதைக் கலாசார பகுதியினர் அறிவார்களா? நிச்சயமாக அவர்கள் அறியாமலிருக்க முடியாது! அறிந்துதான் இருக்கிறுர்கள்! அதனை மிக நன்ருகவே அறிந்திருக்கிறுர்கள் என்பதனலேயே அவர்கள் அப்படிச் செய்திருக்கிறுர்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. அதாவது தமிழினம் இந் நாட்டில் ஒதுக்கப்படவேண்டும் என்று மட்டுமல்ல— ஒதுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, அழிக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டுச் செயலாற்றும் ஒரு —நான் குறிப்பிட்ட கலாசாரப் பகுதியினரின்— தமிழ்க் கலைஞர்களை இருட்டடிப்புச் செய்த செய்கையாகும்.

இப்படியாக தமிழின அடையாளச் சின்னங்கள் பல இந்நாட்டின் வெளியீடுகளிலும் சிறிதுசிறிதாக விடுபட்டு வருவதை, யாம் கவனிக்கக்கூடியதாக இருக்கிறது. அரசினர் திணைக்களங்கள் வெளியிடும் பிரசார இலக்கியங்களிலும் பெரும்பான்மைச் சமூகத்தினர் மட்டுமே சித்தரிக்கப் படுகின்றனர். தேயிலை, ரப்பர் தோட்டங்களிலே பெரும்பான்மையான தொழிலாளிகள் தமிழ்ப் பெண்களாகவே இருக்கின்றனர். ஆனல் தேயிலைக் கொழுந்தெடுக்கும் ஒரினம் பெண் சமீபகாலமாக தமிழினப் பெண்ணுக சித்தரிக்கப்படாமல் விடுபட்டிருப்பது இன்னெரு இருட்டடிப்புச் சம்பவமாக இருக்கிறதல்லவா? இலங்கையைப்பற்றிய தகவல்கள் அச்சிடப்பட்டிருக்கும் உல்லாசப் பிரயாணிகளுக்கான பிரசுரங்களின்படி பார்த்தாலும் இங்கு தமிழினம் இருக்கின்றதா என்ற ஐயப்பாடு இயற்கையாகவே தோன்றுகின்றது. பொருட்காட்சிச் சாலைகளை போய்ப் பார்த்தாலும் தமிழின ஒதுக்கல் தந்திரமாகக் கையாளப்பட்டிருப்பதை யாம் உணரலாம்.

—செல்லையா திருஞான சம்பந்தர், சரவணையூர்.

—□—

சிரிப்பையும் ஊட்டி, சிந்தனையையும் தூண்டிவிடும் 'சிரித்திரன்', நாட்டிலுள்ள சிந்திக்கத் தெரிந்த 'நாலு பேரும்' இன்று சிந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு முக்கியமான தேசியப் பிரச்சினை பற்றி நாலு பேருடைய கருத்தைக் கேட்டிருப்பது மிகப் பொருத்தமான மக்கள் பணியாகும்.

இந் நாட்டின் நாலாபக்கங்களுக்கும், கொழும்பு புகையிரத நிலையத்திலிருந்து புகை வண்டிகள் புறப்படுகின்றன. அவ்வேளைகளில் அங்கு போய்ப் பார்த்தால் யாழ்ப்பாணம், மன்னர், மட்டக்களப்பு, திருகோணமலைக்குப் புறப்படும் வண்டிகளில் பிரயாணிகள் ஏறுவதற்குப்படும் கஸ்டங்களையும், இவ்வண்டிகளிலுள்ள பலவிதமான குறைபாடுகளையும் (நீரின்மை, மின் வெளிச்சமின்மை முதலியன) நேரில் காணக்கூடியதாகவே இருக்கின்றது. இது ஏன் இப்படியான சங்கடங்கள், இவ்வண்டிகளில் மட்டுமே தொடர்ந்து காணப்படுகின்றன என்று சிந்தித்துப் பார்த்தால்— இவ்வண்டிகள் தான், தமிழினம் அதிகமாக வாழும் பகுதிகளுக்குச் செல்கின்றன என்பது தெற்றெனத் தெளிவாகின்றது. தமிழினம் மட்டுமே இதன் மூலம் பாதிக்கப்படுகின்றன என்பது தான் காரணமாக இருந்து அதனாலேயே உரிய கவனமெடுக்கப்படுவதில்லை என்ற முடிவுக்கு வராமலிருக்க முடிகிறதா?

இந்த நாட்டில் சிங்கள, ஆங்கில அறிஞர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். ஆனால், தமிழினத் துறைபோகக்கற்ற தமிழறிஞர்கள் யாருக்காவது டாக்டர் பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கின்றதா?

தமிழினத்தின் வளர்ச்சி, தமிழ் மொழியிலேதான் தங்கியிருக்கின்றதென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். இந் நாடு தோன்றிய காலந்தொட்டு இங்கு பரவலாக எங்கும் தமிழினம் வாழ்ந்து வருகின்றது. எனினும் நாட்டின் எப் பாகத்திலும் தமிழ் சிறுர்கள் தமிழ் மொழியைப் பயிலும் வாய்ப்பும் வசதிகளும் இருக்கின்றனவா? தமிழ்ப் பாடசாலைகளின் தரம் குறைபடுவதையும், தமிழ்ப் பாடசாலைகளை மூடுவதற்கெடுபடும் எத்தனங்களைப் பற்றியுமே நாம் இன்று கேள்விப்படுகின்றோம். தமிழினத்தை ஒதுக்குவதற்கு இதைவிட நுட்பமான மார்க்கம் வேறு என்ன இருக்கின்றது?

இந் நாட்டுத் தேசிய வீரர்கள் சிலர் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஒரு தேசிய வீரராகக் கணிக்கப்படாததேன்? ஒரு தபால் முத்திரைதானும் அவர் ஞாபகார்த்தமாக வெளியிடப்படாததேன்?

இலங்கை வரலாற்றுக் குறிப்புக்களை எழுதும் தற்காலக் குட்டிச் சரித்திராசிரியர்கள் இந்நாட்டின் மக்களைப்பற்றி எழுதும் போதும், தமிழினம் என்றொரு மக்களினம் இங்குண்டென்பதனை தந்திரமாக மறைத்தும் குறைத்தும் வருவதை நாம் கவனிக்காமலிருக்க முடியாது.

தமிழினம் மொழி, கலை, கலாச்சாரம் முதலிய துறைகளில் மட்டுமல்ல; தமிழர்களுடைய சமய வாழ்விலே கூட ஒதுக்கப்படுகின்றது. சைவ சமய பாட புத்தகங்களிலே சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் காணவில்லையே! வேதாந்தக் கொள்கைகள் நுழைந்த காரணம் தமிழினத்தை ஒதுக்குவதற்கல்லாமல் வேறெதற்காக?

—திருமதி தி. கோதை நாயகி, சாவகச்சேரி.




## வேல் முருகா ஊதுபத்திகள்

**சிவன்:** பக்தா! ஏனைய பக்தர்கள் எல்லோரும் மோட்சத்தை விரும்ப, நீ மட்டும் ஈழத்தில் பிறவி எடுக்க விரும்பும் காரணம் யாதோ?

**பக்தன்:** எல்லாம் வல்ல பரம்பொருளே! உமக்கு மனமகிழ்ச்சி அளிக்கும் ''வேல் முருகா'' ஊதுபத்திகள் இங்கு கிடைப்பதில்லை. ''வேல் முருகா'' ஊதுபத்திகள் ஈழத்தில் மட்டுமே கிடைக்கின்றமையால் நான் ஈழத்தில் பிறக்க வரம் அருளும் ஐயனே!

தயாரிப்பாளர்கள்:

**ஜெகஜோதி அன் கொம்பனி**

**குருந்தேனியா, கண்டி.**

# ஒய்யப்பங் கங்காணியார்

[குறிஞ்சிதாசன்]

எலங்கையில இருந்து ஈந்தியாவுக்கு போறவுக அங்க ரொம்ப கய்ட்டப்படுருகளேன்னு நீங்கெல்லா யோசிச்சிக்கினு கெடக்குறது எனக்குப் புரிதையா. இங்கேயே ரெத்தமெல்லாம் சிந்திப்புட்டு வயத்த கழுவ ஏதோ ரெண்டு துட்ட எடுத்துக்கினு ஈந்தியாவுக்கு போன கொழும்பு கோட்டையில வச்சே ஐ.ஆறு.சீ காரனுக கிட்டயும் பிட்டுபாக்கட்டு அடிக்கிற நெருப்புக்குச்சி பயலுவ கிட்டயும் அவப்பட்டு கையில மடியில இருக்குறதுகல பறி குடுத்துட்டு அம்போன்னு அக்கர போயி சேருருக. மனசே ஒடஞ்சி போயி ரெத்த கண்ணீரு சிந்திக்கினே ஊரவுட்டுப்புட்டு போறவுகளுக்கு கோட்ட கோச்சிஸ்டேசனுல என்ன அழகான பிரியாவெட கொடுக்குதூண்ணு பாத்தீங்களாய்யா. இந்த வயித்தெரிச்சல யாருகிட்டய்யா போயி சொல்லி அழுவுறது? எந்த கோயில்லேயா முட்டிக்கிறது?

அது கெடக்கட்டுய்யா ஈந்தியாவுக்கு போவனும்ன யேய்யா இப்புடி அழுதுகினே போறீங்க? சிரிச்சிக்கினு போங்கய்யா...!

நம்ம ஈந்தியா காஞ்சிபோன ஊரு தாய்யா... அங்க பஞ்சத்துல கூட்ட கூட்டமா துடிச்சிக்கினு தாய்யா இருக்காக. அதுக்காக பயந்துகினு யேய்யா அழுதுகினே போவனும்! நம்ம ஊரய்யா! ஈந்தியா நம்ம ஊரு!

பசில செத்தாலும் பட்டினில செத்தாலும் அங்கருந்து நம்மல யாரும் வெரட்ட மாட்டாங்கய்யா! நம்பல கேவலப் படுத்தி பேச மாட்டாங்கையா.



அப்புடி பட்ட நம்ம ஊருல பஞ்சத்துல செத்தாலும் இன்னய்யா, பசில செத்த இன்னய்யா, ஆத்தும திருப்தியோட சாவுரோமே அது போதுய்யா, அது போதும்.

ஆகா... ஆகா நீ சொல்லறத நிப்பாட்டையா. நானு சொல்றேன் கேலு. டே... மாடசாமி ராவனே ஆண்டாலு சரி ராமே ஆண்டாலும் சரி இங்க இருக்கக் காட்டியு நம்ம நெலம்ம மாறப் போறதில்லேயா. கருப்புக் கோட்டுக் கங்காணி எண்ணிக்கும் கருப்புக் கோட்டுக் கங்காணிதாய்யா. அவரு கவுருமண்டு சேவண்டாக முடியுமாய்யா? இதே போல தாய்யா எல்லா. சொதந்திர நாட்டுல சொதந்திரமெல்லாம் பறி குடுத்துப்புட்டு ரெண்டு பக்கமுமே ஒத வாங்குற மத்தலம் போல வெக்கங்கெட்ட வாழுவு வாழாமே நம்ம நாட்டுக்கு போவோய்யா ... சிரிச்சிக்கினே போவோய்யா...
கட்டிக் கெடக்குற நாயி போல சீவிச்ச அடிம சீவியத்த ஒடச்சிக்கிட்டு இன்னிக்காவுது போவக் கெடச்சிச்சேன்னு சிரிச்சிக்கினு போவோய்யா.

இன்னிக்கையா சோறுடைய சோழ நாடும் அங்கயில்ல. பாலு பொங்கும் பாரதமும் அங்கயில்லேயா. பரிதவிப்பும், பட்டினியும் நெறஞ்ச பாரதத்துக்குத்தாய்யா நாங்க போவப்போறோம். இருந்தாலும் சிரிச்சிக்கினே போவோம் தாயி நாட்டுல சாவுற பாக்கியமாச்சு கெடச்சிறுக்கேன்னு ஆத்தும திருப்தி பட்டுகினு சிரிச்சிக்கினே போவோம்—சிரிச்சிக்கினே போவோம்.

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237 -

# சிரிக்கிறு

ஹங்கேரியின் மாணவர் ஒருவர் இடைவிடாது 26 மணி நேரம் பல் தேய்த்து, போட்டியில் வென்றாராம். அவருக்குக் கிடைத்த பரிசு என்ன தெரியுமா? வாழ்க்கை முழுவதும் பல் தேய்க்கப் போதுமான டூத்பேஸ்ட்/பற்பசை.

ஃ ஃ ஃ

அழகான ஆசிரியரைக் காதலிப்பதில் போட்டியிட்ட நான்கு பெண்கள் ஒரு விசித்திரமான ஒப்பந்தம் செய்துகொண்டார்களாம். கல்லூரி கோபுரத்தில் ஏறி, அதிக நேரம் யார் இருப்பாரோ அவர்தான் ஆசிரியரை அடையவேண்டும் என்பதுதான் அந்த ஏற்பாடு.

முதல் பெண் 6 மணி நேரத்திலும், இரண்டாம் பெண் ஒன்பது மணி நேரத்திலும் போட்டியைக் கைவிட்டு இறங்கிவிட, மூன்றாவது பெண்ணோ 22 மணி நேரம் கழித்தே தோல்வியடைந்து இறங்கினாளாம்.

வென்றவளும் மூன்றாவது இறங்கியவளும், கீழே வந்தவுடன் அறிந்துகொண்டது - அந்த ஆசிரியருக்கு ஏற்கெனவே மணமாகி இரு குழந்தைகளுக்கும் தந்தை என்பதுதான்.

ஃ ஃ ஃ

தென் ஆபிரிக்க மனைவியின் 'லோ கட்' ரவிக்கையைக் கண்டு கோபமடைந்த கணவன், மீன் தொட்டியை அவள் மேற் கவிழ்க்க மீன் ஒன்று ரவிக்கையின் இடையில் விழுந்து இறந்துவிட்டதாம். தனது வளர்ப்பு மீனைக் கொன்றுவிட்டதற்காகக் கணவனிடம் இருந்து விவாகரத்துக் கோரினாளாம் அப் பெண்.

ஃ ஃ ஃ

கலிபோர்னியாவிலுள்ள தேவாலயமொன்றில் பிரார்த்தனை நேரத்தில் ஒரு பெண்மணி ஆடையின்றி ஓடினாளாம் — காரணம் மினிஸ் கேர்ட்டுக்குத் தன் எதிர்ப்பைத் தெரிவிக்கவாம்.

ஃ ஃ ஃ

மரியாதைக் குண்டுகள் சுடப்படுவது ஏன் தெரியுமா? பீரங்கியிலுள்ள குண்டுகள் சுடப்பட்டுவிட்டனவென்றும், இனி பீரங்கி காலியானதால் அதை அடக்குமுறைக்குப் பிரயோகிக்க முடியாது என்று காட்டுவதற்காகத்தான்.

ஃ ஃ ஃ

ஒரு ஐரோப்பிய பெண்மணி இங்கிலாந்திலிருந்த தனது சகோதரியுடன் இடைவிடாது 26 1/2மணி நேரம் டெலிபோனில் பேசி ஒரு சாதனையை ஏற்படுத்தினாளாம்.

ஃ ஃ ஃ

நீங்கள் வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுக்கவில்லையென்றால் உங்கள் மனைவி என்ன செய்வாள்?

நீங்கள் வேலைக்குப் போனபின் உங்களை ஏசுவாள், அல்லது வீடு திரும்பியவுடன் ஒரு பாட்டம் அழுவாள்.

ஒரு மேற்கு ஜெர்மனி மனைவி என்ன செய்தாளாம் தெரியுமா? புருஷனிடம் பணம் வாங்குவதற்காக, அவன் மேசன் வேலை செய்துகொண்டிருந்த 215' உயரமுள்ள சாரக் கம்பிகளின் மீது கட்டிட உச்சிக்குச் சென்று பணம் பெற்றுக்கொண்டு, அபாயகரமான சாரத்தின் வழியாக மீண்டும் இறங்கி வந்தாளாம்.





பகலிரவாய்ப் பாடுபடும்
பாட்டாளி,

பாங்குடனே பணம்
சேர்க்கும் முதலாளி.

இவர்கள் யாவரும்
விரும்பிப் புகைப்பது

காரம், மணம், குணம்

நிறைந்த

கமலா பீடியே!

முப்பது வருடங்களுக்கு மேலாக இந்தியாவிலும், இலங்கையிலும் இணையற்றதெனப் புகழ் பெற்றது.

தயாரிப்பாளர்கள்:

கமலா ஸ்டோர்ஸ்

பொன்னம்பலம் பில்டிங்ஸ்,

176, சென்ரல் வீதி, கொழும்பு.

# ஒரு பிந்தைய தலைமுறையின் நிழலில்

(ஒரு கட்டுக் கோப்போடு இயங்கிற குடும்பத்தை கோயில்ன்னு சொல்லுவாங்க. குடும்பங்கிறது கோயிலா? அல்லது நரகமா? என்கிற கேள்வியை எல்லோருமே ஒரு பெண்ணிட்ட இருந்துதான் எதிர்பார்க்கிறுங்க. ஏன்னு அதைக் கோயிலா மாத்திடறதோ அல்லது நரகமா ஆக்கிடறதோ பெண்ணுடை கையிலதான் இருக்கு. அந்தக் கோயிலிலே குடியிருக்கிற தெய்வமே பெண்தான். தெய்வத்தை வெறுத்துட்டு பக்தன் போயிட்டானேங்குறதுக்காக கோயிலையே வெறுத்திட்டு தெய்வம் போயிடறதில்லே. வாழ்க்கையை ஒரு கோயிலா மாத்திக்கத்தான் நான் ஆசைப்படறேன். இது ஒரு தர்மம். இதைத் தவமா உணர்ந்திட்டு நான் வாழப் பழகிட்டேன்.)

நீலச் சேலையை நீட்டி விரித்தாற்போன்றிருந்த வானத்தில் அரை வட்டமாய் ஒட்டிக் கிடக்கும் நிலவை வெளித் திண்ணையில் வந்து நின்று பார்க்கிறுள் கங்கா. இறந்த கால ஊமையடியொன்றின் ஊனம் நெஞ்சில் சுமையாய் கனக்க ஏதேதோ நினைவுகள் நெஞ்சுக் கூட்டுக்குள்வந்து மோதி வேதனையாய் வெளிக் கிழம்புகின்றன. என்றோ ஒரு நாள் கை நழுவிப்போன ஒன்றை மறக்கவும் முடியாமல், நினைக்கும் உரிமையும் இல்லாமல் எத்தனையோ ஆண்டுகளை 'கங்கா' கழித்து விட்டாள். அவளது வாழ்க்கை அத்தனை ஆண்டுகளிலும் நீரில் ஒட்டாத இலையாய், நினைவில் ஒட்டாத கனவாய் ஆகிவிட்டாற் போன்றிருந்தது. நினைத்துப் பார்க்கக் கங்காவுக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

கட்டுப்பாடற்ற கிராமத்துப் பெண்ணுய் வயல் வரம்புகளிலும், ஆலயபிரகாரத்திலும், மௌனித்து நிற்கும் மர நிழல்களிலும், கால் புதையும் கடற்கரை மணலிலும் அவனோடு ஓடித் திரிந்து கதைபேசி, சிரித்து, சிணுங்கி கால ஓட்டத்தைத் தன் கனவுகளிலேயே கரைத்துவிட்ட அந்த நாட்களை இப்போது மனதிற் கொணர்ந்து அசைபோட்டுப் பார்க்கிறுள் கங்கா. வெறுமைதான் மிஞ்சுகிறது. இருளைப் பார்த்து மிரள மிரள விழிக்கும் குழந்தையைப் போல் அந்த வெறுமையை நினைத்து அவள் விம்மி, விம்மி அழப் பழகிவிட்டாள். அந்த இனிய நினைவுகள் நெஞ்சிலிருந்து திடீரென்று ஒருநாள் வெறும் கனவுகளாய் நழுவி விழ, இதயத்தில் விழுந்த அந்த ஊமையடியின் வலியை மறக்க இப்போது அவளுக்கு உறு துணையாய் நிற்பவை அந்த வயல் வரம்புகளும், கடற்கரை மணலும், மரநிழல்களும்தான்.

நகரத்தின் நாகரீகச் சந்தடியிலிருந்து ஒதுங்கி நிற்கும் அந்த அழகிய சிறு கிராமத்தின் மண்ணை, மண்ணின் வாசனையை அழகை, அழகுக்கும் அப்பால் நின்று அவளை ஈர்க்கும் அந்த அமைதியை அவள் வெகுவாய் ரசித்த நாட்களுமுண்டு. அவ்வ் அவனோடு கைகோர்த்துத் திரிந்த அந்த நாட்கள் இப்போது அந்த கிராமமே வெறும் சூனியத்துள் ஆழ்ந்துவிட்டதாக அவளுக்குள் ஒரு பிரமை. கிராமம் மட்டும் என்ன அவள் மனமும் கூடத் தான் சூன்யத்துள் ஆழ்ந்து விட்டது. திண்ணையோரமாக உட்கார்ந்து கொண்டாள் கங்கா. குளிர்ந்த காற்று உடலுக்கு இதமாக இருந்தது. மெலிந்த கரம் ஒன்றின் ஸ்பரிசத்தால் திடுக்கிட்டு அவள் திரும்பிப் பார்த்தாள். அவளுடைய அப்பா சுந்தரவதனம்.

'அவனையே நினைச்சிட்டிருந்தா உன் வாழ்க்கை என்னம்மா ஆகிறது?' மனம் சூன்யத்துள் நழுவிக்கொண்டிருக்க தந்தையின் வார்த்தைகள் காதில் விழவில்லை கங்காவுக்கு.

உம்! என சூள் கொட்டிக் கொண்டே தந்தையைத் திரும்பிப் பார்த்தாள். சுந்தரவதனம் தான் மீண்டும் கேட்டார்.

'அவனையே நினைச்சிட்டிருந்தா உன் வாழ்க்கை என்னம்மா...' அவர் கேள்வியை முடிக்கவில்லை. கங்கா பதில் சொல்லிவிட்டாள்.

'என் வாழ்க்கையே அவர் தானேப்பா. அவரையே நினைச்



— நெய்தல் நம்பி —

சிட்டிருந்தா என் வாழ்க்கையை நினைச்சிட்டிருக்கிறதா ஆயிடாதா?'

வேதனைப்படவேண்டிய சமயத்தில் வேதாந்தம் பேசும் மகளை நினைத்து மனதுக்குள் அழுதுகொண்டார் சுந்தரவதனம்.

உனக்குக் கல்யாணம் பண்ணிவைக்கிறதா முடிவு பண்ணிட்டேன்' என்று ஒவ்வொரு வார்த்தைகளையும் மென்று விழுங்கிக் கொண்டே சொன்னார் சுந்தரவதனம் அந்த வார்த்தைகளின் பின்னணியிலே எத்தகைய பூகம்பம் எழப் போகிறது என்பதை முன் கூட்டியே தெரிந்து வைத்திருந்தவராகையால் அவரது வார்த்தைகள் உதட்டைத் தொட்டும் தொடாமலும் வெளிவந்தன.



கங்காவுக்கு ஒரு கணம் உடல் முழுவதும் சில்லிட்டாற் போன்றிருந்தது. கல்யாணம் என்ற வார்த்தை இதயத்தை வாள்கொண்டு அறுத்தாற் போன்றிருந்தது கங்காவுக்கு.

'சட்டப்படி நான் ஒருதருக்கு மனைவியாய் ஆயிட்டதை நீங்க மறந்தாலும் நான் மறக்கலேப்பா. சட்டமும் மறக்காது'

'சட்டத்தைத்தான் அவன் மீறிட்டு வேறு ஒருத்தியைக் கட்டிக்கிட்டனேம்மா. அதுக்கு மேல் நாம் என்ன பண்ண முடியும்?'

'சட்டத்தை அவர் மீறிட்டாரேங்கிறதுக்காக என்னுடைய இலட்சியத்தை நான் மீறிட முடியுமா அப்பா?'

'இது இலட்சியமில்லேம்மா சுத்த பைத்தியக்காரத்தனம். இதனல் பாதிக்கப்படுவது உன் வாழ்க்கை. நல்லா சிந்திச்சுப் பாரும்மா' என்று அழமாட்டாத குறையாக மகளிடம் வேண்டினுர் சுந்தரவதனம்.

கங்கா மௌனமாக நின்ருள். எந்தவித உணர்ச்சிகளாலும் அவள் பாதிக்கப்படவில்லை என்பதை அவளது நிஷ்களங்கமான முகம் எடுத்துக் காட்டியது.

சுந்தரவதனம் மெல்ல நடந்து வந்து திண்ணையில் உட்கார்ந்திருந்த தம் பெண்ணின் தலை மயிரைக் கோதிவிட்டார். தந்தையின் ஸ்பரிசம் கங்காவின் உடலை மட்டுமல்லாது உள்ளத்தையும் சிலிர்க்கச் செய்தது.

சுந்தரவதனம் மீண்டும் சொன்னுர்.

'அவனையே நினைச்சிட்டு நீ வாழ்கிற இந்த வாழ்க்கையை ஒரு தவம் என்ருே அல்லது ஒரு தர்மம் என்ருே நீ நினைக்கலாம். ஆனல் உன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாம நீ தவிக்கிற தவிப்பையும், தினம் அவைகளோடு போராடிக்கொண்டு நீ படுகிற வேதனையையும் பார்க்கும்போது ஒருவனுக்கு ஒருத்தி என்கிற இந்தப் பாரம்பரிய நெறி எல்லாமே கண்மூடித் தனமான சம்பிரதாயங்கள் என்றுதான் எனக்குப் படுகிறது' என்று சொல்லும்போதே ஆத்திரம் கொண்டவளாய் கங்கா தன் தந்தையை நிமிர்ந்து பார்த்தாள். அவளது பார்வையை நேருக்கு நேர் நின்று சந்திக்கத் திரணியற்றவராய் சுந்தரவதனம் தலை குனிந்துகொண்டார்.

'அப்பா!' என்று கங்கா அழைக்கவே சுந்தரவதனம் மீண்டும் கங்காவை நிமிர்ந்து பார்த்தார். அவள் ஓர் உறுதியோடு சொன்னுள்.

'என்னுடைய உணர்ச்சிகளை மதிக்காம என்னை விட்டு அவர் எப்போ பிரிந்து போனுரோ அன்றே என்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு என்னுல் வாழ முடியும் என்கிற திடமான எண்ணம் என்னில் வேரூன்றிவிட்டது. அந்த சக்தியை எனக்குத் தந்ததே அவரது நினைவுதான். எந்த உணர்ச்சிகளை மதிக்காம அவர் என்னை விட்டுப் போனுரோ அந்த உணர்ச்சிகளினுலேயே பாதிக்கப்பட்டு நான் குறுகிப் போகாமல் என்னைச் சுற்றி ஆத்மரீதியான ஒரு வேலி அமைத்துக்கொண்டு வாழ நான் பழகிட்டேன். இதையே பைத்தியக்காரத் தனமென்று நீங்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பல்ல' என்று சொல்லிவிட்டு கங்கா உள்ளே போய்விட்டாள். சுந்தரவதனம் அந்தத் திண்ணையில் அமர்ந்துகொண்டார்.

வெளியே பாலாய்க் காய்ந்து கொண்டிருந்த நிலவும், குளிர்மையைக் கலந்து வீசிய காற்றும் மாரியம்மன் கோயிலிலிருந்து காற்றில் கலந்து வந்த மேள ஒலியும் அவருடைய உணர்ச்சிகளிலிருந்து நழுவி ஓட என்ருே ஒரு நாள் தன் பெண்ணின் வாழ்க்கையோடு விளையாடிவிட்டு ஓடிவிட்ட சிவானந்தம் அவருடைய நினைவை ஆக்கிரமித்துக்கொண்டான். நல்லவர்கள், கெட்டவர்கள், நாலும் தெரிந்தவர்கள் எல்லோரும் ஒரே மண்ணில் பிறந்து, ஒரே கடலில் உழைத்து ஒரே கிணற்று நீரைக் குடித்து வாழ்ந்தாலும் அவர்களுக்குள் வேரோடிக் கிடந்த வேற்றுமைகள் கணக்கிலடங்கா. ஆனுல்

# சிரித்திரு



ஒரு கடிதத்தைத் தபாலில் சேர்க்கச்சென்ற ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி, கடிதத்தைத் தபாற் பெட்டியில் போடாமலே திரும்பி விட்டாள். காரணம்— அவள் கடிதம் போடச் செல்லும் போது, யாரோ ஒருவன் தபாற் பெட்டியைத் திறந்து, உள்ளே கிடந்த கடிதங்களை எடுத்துக் கொண்டிருந்ததுதான்.

அத்தனை பேருடைய உள்ளங்களையும் வெற்றிகொள்ளக் கூடிய மனிதத் தன்மை சுந்தரவதனத்திடம் ஏராளமாய் இருந்ததென்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எல்லோருக்கும் சுந்தரவதனம் நல்ல மனிதர்.

வலையைத் தூக்கிக்கொண்டு கடலுக்குப் போகவேண்டிய சிவானந்தத்தை பேனவைத் தூக்கிக்கொண்டு ஆபீஸுக்குப் போக வைத்த பெருமை சுந்தரவதனத்தையே சாரும். அதற்காக அவருடைய பணம் மனிதத் தன்மை இரண்டும் எவ்வளவு அவனுக்காக விரயமாகி இருக்கிறதென்றால் அது கணக்கிலடங்கா. அதற்கு மேலாக அவருடைய மருமகனாகவும் சிவானந்தத்தை ஆக்கிவிடவேண்டுமென்று வெகுவாய் ஆசைப்பட்டார். கங்காவுக்கு ஏற்றவன்தான் சிவானந்தம். கங்காவும் சிவானந்தமும் அந்த கிராமத்தையே ஒரு இடம் பாக்கி இல்லாமல் கை கோர்த்துக் கொண்டு சுற்றிய அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அவர் மனதில் போட்டுமென்று அது சரிவர ஜீரணித்த பின்தான் அவரது ஆசையை அவனிடம் தெரிவித்தார்.

சிவானந்தமும் கங்காவும் திருமணப் பதிவின் மூலம் சட்டப்படி தம்பதிகளாயினர். ஆனால் சம்பிரதாய முறைப்படி திருமணம் நடக்குமுன் சிவானந்தம் பட்டணம் போனவன்தான் திரும்பி வரவேயில்லை.

சுந்தரவதனத்தின் பணத்தையும், மனிதத் தன்மையையும் மூலதனமாக வைத்து முன்னுக்கு வந்த சிவானந்தம் தன்னுடைய மனிதத் தன்மையை மறந்துவிட்டான்.

திருமணப் பதிவின் பின் பட்டணம் போனவன் பின்பு திரும்பி வரவேயில்லை. எத்தனை இரவுகள்! எத்தனை பகல்கள்! அத்தனை இரவுகளும் கங்காவுக்கு தூக்கமின்றிக் கழிந்த இரவுகள். அத்தனை பகல்களும் அவளுக்கு சுவாரஸ்யமின்றிக் கழிந்த பகல்கள். காலப் போக்கில் கங்காவின் மனம் மாறும் என்று சுந்தரவதனம் எதிர்பார்த்தார். மகள் தன் மனதிலோ பூண்டுவிட்ட வைராக்கிய விரதம் சுந்தரவதனத்திற்குப் பைத்தியக்காரத் தனமாகத் தோன்றியது. என்றாலும் மகளை எதிர்க்க அவருக்குத் துணிவில்லை. என்றோ வாழ்ந்த ஒரு சமூகத்தின் சட்டதிட்டங்களையும் அது கட்டிக் காத்து வந்த சம்பிரதாயச் சடங்குகளையும் இன்று வாழும் சமூகம் பைத்தியக்காரத் தனமென எண்ணி ஒதுக்கிவிட்டு ஓட முயன்றாலும் அவற்றை ஒரு தர்மமாக, ஒரு பாரம்பரியத்தின் ஞாபகமாக பேணிக் காக்க வேண்டுமென்ற வேணவாவும் மன உறுதியும் இன்றைய தலைமுறையினரில் ஒரு சிலருக்காவது இல்லாமலா போய்விடும்? பின்னோக்கி ஓடிவிட்ட ஒரு தலைமுறையின் பிரதிநிதியாக, முன்னோக்கி ஓடும் சமூகத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாக வாழவேண்டுமென்ற கங்காவின் விரதத்தைக் கலைக்க எத்தனை சுந்தரவதனங்களாலும் முடியவில்லை.

நிலவைப் பார்த்து ஊளையிடும் தெரு நாயொன்றின் பிலாக்கணம் எங்கோ தொலை தூரத்தில் கேட்டது. அதனைத் தொடர்ந்து சாமக் கோழியொன்று கூவியது. சுந்தரவதனம் சுயநினைவு வரப் பெற்றவராய் உள்ளே சென்று விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தார். உறக்கம் வரவில்லை. மகளின் பிடிவாதத்தை நினைத்து நினைத்து வியந்தார். வியப்போடு வேதனையும் நெஞ்சை நிறைத்தது. எந்த நூற்றாண்டிலோ வாழ வேண்டிய பெண் இந்த நூற்றாண்டிலே வாழ்கிறாளே? என்று நினைத்துக் கொண்டார்.

திரௌபதியம்மன் திருவிழாவிற்கு இன்னும் ஒரு வாரமே இருந்தது. வருடந்தோறும் நடைபெறும் தீ மிதிப்பில் கலந்து கொள்ள, அவனும் தன் புது மனைவியோடு இங்கு வரப் போகிறானாம் என்ற செய்தி, காற்று வாக்கில் அவர் காதிற்கு எட்டியிருந்தது. ஆறிப் போயிருக்கும் புண்ணில் எதிர்பாராத விதமாக கல் தடுக்கி மீண்டும் அதிலிருந்து இரத்தம் கசிவது போல கங்காவின் நெஞ்சில் ஆறிப்போயிருக்கு மந்த ஊனம், அவன் வருகையால் மீண்டும் ரணகளமாகப் போகும் கொடுமையை நினைத்துப் பார்த்தார். நெஞ்சு தாளவில்லை. அன்றிரவு அவர் தூங்கவேயில்லை.

உறக்கமென்பது மனிதனுக்கு கிடைத்திருக்கும் ஒரு வரப்பிரசாதம். ஆனால் அதனைக் கலைக்கவென்றே துன்பமென்னும் சாபக்கேட்டையுமல்லவா ஆண்டவன் மனி

தனுக்கு அளித்திருக்கிறான். அன்று கங்காவிடம் சுந்தரவதனம் கேட்டார்– 'இன்னைக்கு அவன் வரப்போகிறானாமே! அதுவும் அவளோடுதான்...'

கங்கா பதில் சொல்லவில்லை. அவளது முகத்தில் எவ்வித சலனமும் இல்லை. இவளுக்கு இது முன்கூட்டியே தெரியுமோ? என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டார், சுந்தரவதனம்.

'அவளோட கைகோத்துக் கிட்டு அவன் நிற்கிற காட்சியைப் பார்த்ததுக்கப்புறமாவது உன் மனதை நீ மாத்திக்கமாட்டியான்னுதான் மாரியாத்தாளைத் தினமும் மனசார நான் வேண்டிக் கிட்டிருக்கிறேன்.' எங்கோ பார்த்துக்கொண்டு யாருக்கோ சொல்வதுபோல் சுந்தரவதனமும் முணுமுணுத்தார். அவரது அத்தனை சொற்களும் கங்காவுக்குத் தெளிவாகக் கேட்டன.

மென்முறுவலொன்று மெல்லிய கீற்றாக அவளது முகத்தில் படர்ந்தது. என்ன துன்பம் நேர்ந்தாலும் லட்சியத்திலிருந்து நழுவக்கூடாது என்ற தத்துவத்தை இவள் எங்கே பயின்றாள்? என்று சுந்தரவதனத்திற்கு வியப்பாயிருந்தது.

தீ மிதிப்பு விழா அன்று அந்தக் கிராமமே மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. கடலன்னையின் அலைக் கரங்கள் ஏற்படுத்தும் ஒலி வெள்ளத்திலும் கதிரவனின் பொன்னிறக் கதிர்கள் வீசும் ஒளிவெள்ளத்திலும் மூழ்கி எழுந்த பக்தர் கூட்டம் 'பூ' மிதிக்கப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர்.

எதிலுமே ஒட்டாமல் கங்கா தனித்து கோயிலின் ஒரு மூலையில் ஒதுங்கி நின்றிருந்தாள். ஏதும் அசம்பாவிதங்கள் நடக்கக்கூடாதென அவளது மனம் வினாடிக்கு வினாடி மானசீக பிராத்தனையில் ஈடுபட்டிருந்தது.

கோயிலுக்குள் ஏதோ சலசலப்பு. அந்த சலசலப்புக்கு இடையே சுந்தரவதனத்தின் குரல்மட்டும் தெளிவாகக் கேட்டது. யாரையோ வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிக்கொண்டிருந்தார். கூட்டத்தில் ஒரே பரபரப்பு. அத்தனை பரபரப்புக்கிடையேயும் கங்காவின் கண்கள் ஓரிடத்தில் நிலைகுத்தி நின்றன.

ஆம்! சிவானந்தம் தான் அவளுடைய கண்களுக்குள் சிறைப்பட்டுக் கிடந்தான். ஆனாலவன் நின்ற நிலை? ஆவேசம் வந்தவன் போல் நின்றிருந்தான். அவனுக்


வாடிக்கையாளரின் திருப்தியே எம் பெரும் லாபம்!

என மதித்துச் சேவை செய்யும் ஸ்தாபனம்

சிங்காரம்ஸ் ஜவுளி மாளிகை

டைமா நகை மாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு - 11



உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்

PHONE: 20875

## வாழி குழந்தாய் !

முல்லையே! முழுமதியே!
மோகனமே! உனைக்கண்டு
முல்லைமலர் வாடிற்றாம்!
முழுமதியோ ஓடிற்றாம்!
மெல்லஇரண் டாண்டினிலே
மேதினியில் அடிவைக்கும்
நல்'யோக ரஞ்சினியே!'
நலம்வாழ வாழ்த்துகிறோம்!



பெயர்: யோகரஞ்சினி சிவப்பிரகாசம்.
விலாசம்: 'பாரதி அகம்', கரணவாய் தெற்கு, கரவெட்டி
பிறந்த திகதி: 10-5-1969.

குப் பக்கத்தில் நவ நாகரீக உடை அணிந்த ஒரு பெண், உடைகள் கசங்கிய நிலையில் நின்று கொண்டிருந்தாள். அவள் தான் சிவானந்தத்தின் புது மனைவி, என்பதைப் புரிந்து கொள்ளக் கங்காவுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை.

சிறிது நேரத்தில், அவர்கள் இருவரும் கோயிலிலிருந்து வெளியேறி, காரொன்றில் ஏறிப்போய் விட்டார்கள்.

சிவானந்தத்தையும் அவனது புது மனைவியையும் ஒருசேரப் பார்த்ததில், சுந்தரவதனத்திற்கு அடக்க முடியாத ஆத்திரம். இருக்காதா? பெற்ற மகளின் வாழ்வைப் பாழாக்கி விட்டவன் படாடோபமாகப் புது மனைவியுடன், அதுவும் அவர் கண் முன் நின்றால், யாருக்குத்தான் மனிதத் தன்மையுடன் நடந்து கொள்ள மனம் வரும்? வாய்க்கு வந்தபடி எல்லாம் திட்டி விட்டார். ஆத்திரம் தாளாமல் கையையும் ஓங்கி விட்டார். பக்கத்தில் இருந்தவர்கள் சமாதானப் படுத்தி, அவரை வீடு வரை கூட்டிச் செல்வதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

அன்றிரவு, கங்காவுக்கு அழுதழுது முகமெல்லாம் வீங்கி விட்டது. அப்பாவின் முகத்தில் விழிக்கக் கூட அவள் விரும்பவில்லை. என்றாலும் ஒரு வித பயமும் அவளிடம் தோன்றத் தொடங்கியது அப்பா அதே ஆத்திரத்தைத் தன் மீதும் காட்டக்கூடுமென்று.

சுந்தரவதனமோ, கோபம் நீங்கி அமைதியாகத்தான் மகளுடன் பேசினார்.

'ஏம்மா கங்கா! இனிமேலாவது உன் பிடிவாதத்தை விடக் கூடாதா? என்ன நெஞ்சழுத்தம் இருந்தா அவன் எவளோ ஒருத்தியோட உன் முன்னால் வந்து நிற்பான்? அவனைப்பழிவாங்கணும்னா நீயும் ஒருத்தனோட அவன் முன்னால போய் நிக்கணும்!'

அப்பாவின் அப்பாவித்தன பேச்சைக் கேட்டு, அழுவதா? சிரிப்பதா? என்றே கங்காவுக்குத் தெரியவில்லை.

'என்னைக்கு அவர் என்னை விவாகப் பதிவின் மூலம், தன் மனைவியாக்கினாரோ அன்னைக்கே நானும் அவரும் கணவன் மனைவி ஆயிட்டோம். அன்றிலிருந்தே ஒரு கட்டுக் கோப்பான குடும்பமாக நான் வாழ ஆரம்பிச்சுட்டேன். ஒரு கட்டுக் கோப்போடு இயங்கிற குடும்பமே கோயில்னு சொல்லுவாங்க. குடும்பங்கிறது 'கோயிலா? அல்லது நரகமா?' என்கிற கேள்வியை எல்லோரும் ஒரு பெண்ணிட்ட இருந்துதான் எதிர் பார்க்கிறாங்க. ஏன்னா அதைக் கோயிலா மாத்திடறதோ அல்லது நரகமா ஆக்கிடறதோ பெண்ணோட கையிலதா இருக்கு. அந்தக் கோயிலிலே குடி இருக்கிற தெய்வமே பெண்தான்' —அவள் அமைதியாகச் சொன்னாள்.

'தெய்வத்தை வெறுத்துட்டு பக்தன் போயிட்டானேங்கிறதுக்காக, கோயிலையே வெறுத்திட்டு தெய்வம் போயிடறதில்லே. வாழ்க்கையை ஒரு கோயிலா மாத்திக்கத்தான் நான் ஆசைப்படுறேன். இது என்னோட பிடிவாதம்னு நீங்க நெனச்சா அது தவறு இது பிடிவாதமில்லே ஒரு தர்மம். இதைச் சுவமா உணர்ந்திட்டு நான் வாழப் பழகிப்டேன். இது ஒரு பைத்தியக்காரத் தனமான முடிவுன்னு நீங்களும், நீங்க வாழ்ந்துகிட்டு இருக்கிற உலகமும் நினைச்சா அதுக்கு நான் பொறுப்பில்லே. இனிமே இதை பத்தியே பேச்செடுக்காம இருந்தீங்கன்னா அதுவே எனக்குப் போதும். என்னுடைய இந்தத் தவம் எப்போ கலையுதோ அப்பத்தான் எனக்கு உண்மையிலேயே பைத்தியம் பிடிச்சிட்டதாக நீங்க நினைக்கனும்' எனச்சொல்லிவிட்டுக் கங்கா உள்ளே போய் விட்டாள்.

எந்த நூற்றாண்டிலோ வாழ்ந்து விட்டுப் போன ஒரு சமூகம், உமிழ்ந்து விட்டுச் சென்ற எச்சமாக நிற்கும் கங்காவை, சுந்தரவதனத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை; புரிந்து கொள்ளவும் முடியாது. ஏனென்றால், அவர் வாழ்வது இந்த நூற்றாண்டில்! □


# திலக் ஏஜென்சி

113, டாம் வீதி, கொழும்பு - 12

எங்களிடம் சகல விதமான

* நூல், கயிறு தினுசுகள்
* அலுமினியச் சாமான்கள்
* இரும்பு - அலுமினியத் தாச்சிகள்
* கல்வனைஸ் வாளிகள்
* அலுமினியக் கரண்டிகள்

போன்ற வீட்டுப் பாவனைப் பொருட்களைச் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.




## விவேக சறுக்கரம்

எமது பாடசாலை எனது வீட்டிலிருந்து ஐந்து அல்லது ஆறு மைல்கள் இருக்கும். பாடசாலைக்கு நான் சயிக்கிள் மூலமாகவே செல்வது வழக்கம். நான் போகும் போது எனது நண்பன் சாமியையும் கூட்டிக் கொண்டு தான் செல்வது வழக்கம். எம்முடன் சேர்ந்து எமது வீட்டிற்கு பக்கத்திலிருக்கும் செல்லையா மாஸ்டரும் பாடசாலைக்கு வருவார். நாங்கள் மூவரும் கதைத்த வண்ணம் பாடசாலைக்குச் செல்வோம்.

ஒரு நாள் போகும்போது செல்லையா மாஸ்டர் சொன்னார் 'டேய் சாமி என்னத்தை இன்றைக்கு கதைத்துக் கொண்டு போறது? ஒரு கதையுமில்லை. ஆனபடியால் விடுகதை அல்லது ஏதும் கேள்விகள் கேளுங்கோவன்' என்றார். அதற்கு சாமி 'என்னத்தை மாஸ்டர் கேக்கிறது' என்றான். மாஸ்டர் சொன்னார், டேய் நீங்கள் ஒரு கேள்வி கேட்டு நான் மறுமொழி சொல்லாவிடில் உங்களுக்கு நான் பத்து ரூபாய் தருவேன். ஆனால் நான் கேள்வி கேட்டு நீங்கள் மறுமொழி சொல்லாவிடில் நீங்கள் எனக்கு ஐந்து ரூபாய் தர வேண்டும். சரியா? என்றார். சாமியும் ஓம் சார் என்றான். உடனே மாஸ்டர் சொன்னார். சாமி நீதான் முதல் கேள்வியைக் கேள் என்று.

நான் யோசித்தேன், இவன் என்ன கேள்வி கேட்பான் என்று. உடனே அவன் 'சார் எனது தகப்பன் ஓர் விவசாயி. எனது தகப்பன் விவசாயம் செய்யும் நிலத்தில் (தோட்டத்தில்) ஓர் பறவை பறந்துதிரிகிறது. அப்பறவை இரண்டு காலில் நடக்கும்; ஒற்றைச் செட்டையால் பறக்கும் அதனுடைய பெயர் என்ன' என்றான்.

ஆசிரியர் யோசித்த வண்ணம் சையிக்கிளை மிதிக்கிறார். நானும் பறவையினுடைய பெயரை யோசித்த வண்ணம் சையிக்கிளை ஓட்டினேன். பாடசாலை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆசிரியர் சாமியைப்பார்த்து 'சொல்லு பறவையினுடைய பெயர் என்ன' என்றார். உடனே சாமி, அப்படியென்றால் உங்களால் முடியாது தானே என்றான் ஆசிரியர் ஓம் என்றார். உடனே சாமி, அப்படியானால் நான் கேள்வி கேட்டு உங்களால் பதில் சொல்ல முடியவில்லை. எனவே பத்து ரூபாயை தாருங்கள் என்றான். ஆசிரியரும் மனக்கசப்புடன் இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுக்களை கொடுத்தார் சாமியும் அதை வாங்கிக் கொண்டு உங்களுடைய கேள்வி என்னசார் என்றான். அதற்கு ஆசிரியர் அந்தப் பறவையினுடைய பெயர் என்ன என்றார். அதற்கு சாமி எனக்கும் தெரியாது சார் இந்தாருங்கள் ஐந்து ரூபாய் என்று அவர் கொடுத்த நோட்டில் ஒன்று கொடுத்த வண்ணம் நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லாவிடில் ஐந்து ரூபாய் தரவேண்டும் எனவே இந்தாருங்கள் ஐந்து ரூபாய் என்று சொல்லி அவரின் காசிலேயே ஐந்து ரூபாயை கொடுத்தான். நானும் ஆசிரியரும் அவனுடைய புத்திசாலித்தனத்தை மெச்சினோம். பாடசாலையில் அன்று முழுக்க இதுவே தான் கதையாக இருந்தது.

(மேற்கண்ட பள்ளிப் பகிடியை எழுதியவர், தனது பெயர், விலாசத்தைத் தரவும்)

## ஓம், நாராயணா...!

ஒரு முறை மானிப்பாய் இந்துக் கல்லூரி மேடையில், புராண நாடகமொன்று அரங்கேறியது. அதில் நாரதர் பாத்திரத்தை ஏற்றவர், கையில் கட்டியிருந்த கடிகாரத்துடன் மேடையேறி விட்டார். முதலில் ரசிகர்கள் அதைக் கவனிக்கவில்லை.

மேடையில் வசனங்களை முழங்கிவிட்டு, ஈற்றில் தன்னிலை மறந்தாரோ என்னவோ, கையை உயர்த்தி நேரத்தைப் பார்த்துவிட்டு, 'உமை பாகரே, எனக்கு நேரமாகி விட்டது. நான் வருகிறேன்!' எனக்கூறி நகர்ந்தார். திரையும் வீழ்ந்தது.


—கு. இராஜ குலேஸ்வரா.

## புவியியல் புத்திசாலி!

ஒரு நாள் எங்கள் புவியியல் ஆசிரியர், 'அதிக மழை பெய்யும் இடங்களும், அங்கு உற்பத்தி செய்யும் பயிர்களும்' என்பது பற்றிப் படிப்பித்துக் கொண்டிருந்தார். மூர்த்தி என்ற பையன் படிப்பிப்பதைக் கேளாது, வேறு ஏதோ செய்து கொண்டிருந்தான். ஆசிரியர் அவனையணுகி, 'மழை அதிகமாகப் பெய்யும் இடங்களில் அதிகமாக உற்பத்தி செய்யப் படுவதென்ன?' எனக் கேட்டார்.

மழைக் கோட்டும், குடையுமென்று அவனிடமிருந்து பதில் வந்தது. நாமனைவரும் 'கொல்' லென்று சிரித்தோம்.

—நெல்லை ஐ. நடேஸ்.



## திருநாம திரிப்பு

நான் எஸ். எஸ். ஸி. வகுப்பில் படிக்குங்காலத்தில் ஒருநாள் எங்கள் வகுப்பில் சரித்திர குடியியல் கழகக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. தலைவர் தனது உரையின் பின் திருவாளர் 'மட் ஹாட்' அவர்களை இங்கு பேச வரும்படி அழைக்கிறேன்- என்று கூறினார். அதைக் கேட்ட எல்லோரும் ஒன்றும் புரியாமல் விழித்தனர். அப்போது தலைவர் எனக்குப் பக்கத்தில் இருந்தவரைக் குறிப்பிட்டுக் காட்டினார். அவர் எழும்பி தனது பெயர் அதுவல்ல என்று கூறி விட்டு அமர்ந்தார். உடனே தலைவர் 'தயவு செய்து மன்னிக்கவும் சேது காவலர் என்ற உமது பெயர் சேறு காவலர் என்று காரியதரிசியால் எழுதப்பட்டிருக்கிறது. அதை நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 'மட் ஹாட்' என்று கூறினேன் என்றார். உடனே அம்மாணவன், தனக்குப் பக்கத்தில் இருந்த காரியதரிசியை அனல் கக்கும் கண்களால் பார்த்து விட்டு தனக்கு ஏற்பட்ட அவமானத்தால் தலை குனிந்தபடி சொற்பொழிவாற்ற எழுந்து சென்றான்.

ச. சபாநேசன்.

## ஆங்கிலாசகாயன்

எங்களுக்கு ஆங்கில பாடம் நடந்து கொண்டிருந்தது. ஆங்கில ஆசிரியர் சொன்னார். 'நான் இப்பொழுது தரப்போகும் பந்தியைப் பாடமாக்கி நாளை எனது பாட நேரம் சொல்ல வேண்டும். சொல்லா விட்டால் கடுமையாகத் தண்டிப்பதோடு ஆயிரம் தடவை 'நான் எனது கடமையைச் சரிவரச் செய்வேன்' என்று எழுதவும் வேண்டும், பின்னர் ஆசிரியர் வாசிக்க, மாணவர் யாவரும் ஆசிரியர் சொன்ன பந்தியை எழுதினோம். பின்பு பாடசாலை முடிந்ததும் எல்லா மாணவரும் ஒன்று கூடி தாம் எழுதியது சரியா எனப்பார்த்தனர். ஆனால் பேரின்பம் என்னும் மாணவன் தான் எழுதியது சரியாவென பாராது வீடு சென்று விட்டான். ஆனால் அவனுக்கு ஆங்கிலம் என்றால் சுத்த சூனியம். அதனால் அவன் கவனம் இல்லாமல் வீடு சென்றது எங்களுக்கு ஒரே வேடிக்கையாக இருந்தது.

மறுநாள் பாடசாலை ஆரம்பமாயிற்று எல்லா மாணவரும் தரப்பட்ட பந்தியை பாடமாக்கி கொண்டிருந்தனர். ஆனால் பேரின்பம் மட்டும் ஆங்கிலம் பாடமாக்காமல் தனக்கு இந்த பாடம் தேவையில்லை என்ற மாதிரி இருந்தான். ஆசிரியர் வகுப்புக்கு வந்தார். வந்தவுடன் அவருக்கு வணக்கம் செலுத்தி விட்டு வகுப்பில் இருந்தோம். ஆசிரியர் தான் கொடுத்த பந்தியை ஒவ்வொரு மாணவரிடமும் கேட்டுக் கொண்டு வந்தார். ஒருவராவது சரியாகச் சொல்லவில்லை. ஆனால் பேரின்பம் என்பவன் எல்லாவற்றையும் சரியாகச் சொன்னான். அதனால் ஆசிரியர் அவனை நன்றாக மெச்சினார். எங்களுக்கும் ஒரே வியப்பு. இதனால் பாடசாலை விட்டதும் நாங்கள் எல்லோரும் ஒன்று கூடி, பேரின் பத்திடம் 'நீர் எப்படி இவ்வளவு வடிவாகப் பாடமாக்கினீர்?' என்று கேட்க அவன் தான் எழுதி வைத்திருந்த கொப்பியைக் காட்டினான். அதில்—

ஏ ரீச்சர்

தெயரு மெனி ரீச்சேஸ் இன் அவர் கன்றி. தே ரீச் வேறியஸ் சப்யற்ஸ் இன் அவர் இஸ்கூல். தே வேக் வெறி காட். யௌறலி அவர் ரீச்சேஸ் டு நொட் வேக் இன் அவர் இஸ்கூல் எவிறிடேய். தே காவ் ரூ கொலிடேஸ் எவிறி வீக்— என்று இருந்தது. உடனே நாங்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

க. கோபிநாதன்

---

ஆசிரியர்:- சங்கிலி மன்னனைப் பற்றித் தெரிந்தவற்றைக் கூறு.

மாணவன்:- சங்கிலி மன்னன் இன்னும் படமாக வரவில்லை நாடோடி மன்னனைப் பற்றி எதையும் கேளுங்க சார் உடனே சொல்லுகிறேன்!

---



# ஆச்சி பயணம் போகிருள்

— செங்கை ஆழியான் —

[17]

கண்டி பஸ்ஸில் ஏறி அமர்ந் தார்கள்.

'இங்கை இருந்து கண்டிக்கு எத்தனை சதம்...'

'பதினேந்து சதம், மாமி'

'கோகயத...?' என்று பஸ் கண்டக்டர் கேட்டான்.

'நுவர துனக்...' என்ருன், சிவராசா.

'என்னவாம்...? அவன் எங்கை போறியள் என்றே கேட் டவன்? இவன் ஏதோ நுவர என்ருன்...'

'நுவர என்ருல் கண்டிக்குப் பெயர், மாமி! சிங்களவர் நுவர என்றுதான் அழைப்பர்...'

'ஓ... கண்டி தமிழ் ராசாக் கள் ஆண்ட இடந்தானே?'

பஸ் குலுக்கலின்றி விரைந்து கொண்டிருந்தது.

'எவ்வளவு அருமையான வசு... எங்கடை ஊரிலும் ஓடுகி னம்... குலுக்கிற குலுக்கலிலே சாப்பிட்ட சாப்பாடு வெளியிலே வந்திடும்... அங்கத்தை வசுக்க ளாலேதான் அங்கை இவ்வளவு நோய்நொடி...'

'பொதுவா இங்கை நல்ல பஸ்கள்தான், ஆச்சி! ரேட்டுக ளும்; கருங்கல்லும், றப்பரும், தாரும் கலந்து போடுகிறது... அதனுலே ரேட்டுக்களும் நல்லா இருக்கு...'

'எங்கடை ஊரிலே ரேட்டுப் போடச் சொன்னுல், ஓவிசியர் மார் கல்லேயும், சீமெந்தையும் வீட்டை வீடு கட்டக் கொண்டு வந்துவிட்டு, மண்ணேயும், மக்கி யையும் போட்டுத்தானே ரேட் டுப் போடுறவை...'

'உப்ப உந்தச் சேட்டையள் வாயாது ஆச்சி... முந்தின ஓவிசி யமாருக்குத்தான் உழைப்பு... இப்ப காசடிக்கிறதென்ருல் காரு க்கு லேசென்ஸ் கொடுக்கிறவை தான்... ஐம்பது நூறு வாங்கிக் கொண்டுதானே கொடுக்கினம்...

'உங்களுக்கு இரண்டு முறை யாக லேசென்ஸ் தரவில்லே என்று இப்பிடிச் சொல்லுங்கோ...' என் ருள் செல்வி.

'உனக்குக் கனக்கத்தெரியும்' என்ருனவன்.

''இங்கையும் 'லோக்கடா' பஸ்கள் ஓடுது மாமி! கண்டிக்கும் பேராதனேச் சந்திக்கு மிடையில் ஓடுற பஸ்ஸிலே ஒருக்கா ஏறிப் பார்க்க வேணும்...குலுக்கலோ... சீற்றுகளே நீளப் பக்கத்திற்குப் போட்டிருக்கிருர்கள் ...... ஒரே குலுக்கல்... கர்ப்பமும் கலங்கிப் போம்...' என்ற செல்வி 'டக்' என்று, உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'அதுக்கு நாளிருக்கு ... ...' என்ற சிவராசா, செல்வியைக் கிள்ளினுன்.



[காருக்கு லேசென்ஸ் கொடுக்கிற வைக்குத்தான் உழைப்பு]

முகம் சிவந்த அவள், தலே யைக் குனிந்து கொண்டாள்.

'வாய் தவறிச் சொன்னு...' என இழுத்தாள்.

பஸ் மெதுவாக நின்றது.

---

**பணக்காரர்:** நீ உவ்வளவு படித்திருக்கிருயே. உன்னுடைய பெயரேதும் புத்தகத்திலே இருக்கிறதா?

**படித்தவர்:** இல்லேயே! ஏன் உங்கள் பெயர் இருக்கிறதா?

**பணக்காரர்:** ஓ! ரெலிபோன் டிறக்ரறியில் இருக்குதே.

# இலங்கை வானெலி வர்த்தகசேவை
# புத்தாண்டு கலைவிழா

**இடம்:** ரேயல் கல்லூரி மண்டபம்.
**நாள்:** 5 - 4 - 1970.

குமாரி தூசிதா திருநாவுக்கரசு — அலாரிப்பு
கண்ணன் கோஷ்டி — வாத்திய இசை
எஸ். கே. பரராசசிங்கம் — பாட்டு
செல்விகள் ராதா ஜெயலட்சுமி — பாட்டு
குமாரி லீலா நாராயணன் — குச்சுப்பிடி நடனம்

காண்போர் நெஞ்சம் திகைக்கும் வண்ணம் மிகவும் திறமையாக இருந்தது.

**யார் மாப்பிள்ளை** [நாடகம்]

குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தது. இது ஒரு ராம்தாஸ் தயாரிப்பு.

**புருஷோத்தமன்-பரதன்** [நாட்டிய நாடகம்]

கண்ணுக்கும், கருத்துக்கும், காதுக்கும் க(ா)ன கச்சிதமான இன்பத்தைக் குறைவின்றி அளித்தது. ஒரு மணித்தியாலம் வரை நடைபெற்ற இந் நாடகம், கம்பனின் கவி அமுதத்தால் தொடுக்கப்பட்டது. பார்ப்பவர் மனத்தில் கண நேரச் சலிப்பைக் கூட உண்டுபண்ணுத முறையில் அமைந்திருந்த தென்றல் இதன் பெருமை சொல்லவும் வேண்டுமோ?

**நாடக ஆக்கமும், இயக்குதலும்:** திரு. கா. சோமசுந்தரம்.
**உதவி:** திருவாட்டி ஞா. சோமசுந்தரம்.
**இசையமைப்பு:** கல்லூரி சங்கீத ஆசிரியை செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை.
**நடனம்:** கீதாஞ்சலி வி.கே. நல்லையா.
**நட்டுவாங்கம்:** ஸ்ரீமதி விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை.
**வயலின் இசை:** பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த சர்மா.
**மிருதங்கம்:** திரு. சின்னராசா.
**பின்னணி:** கல்லூரி ஆசிரியை செல்வி. யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை; அவரது மாணவிகள் செல்விகள் வனஜா சித்திரவேலு; விஜயலக்ஷ்மி அங்கப்பா.

செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாவின் இன்னிசை தனித் திறமையோடு விளங்கியது குறிப்பிடத்தக்கது.

'இறங்கு ஆச்சி! கண்டிக்கு வந்திட்டம்...'

'அதுக்குள்ளையோ...?

ஆச்சி, கண்டி பஸ் ஸ்ராண்டில் நின்றபடி கண்டியை நோட்டம் விட்டாள்.

'இதுதான் கண்டியோ... ? இது என்ன, சிவப்பா ஒரு கட்டிடம்...?'

'இது கண்டி மாக்கற்...... சந்தை, ஆச்சி! இலங்கையிலேயே சிறந்த மாக்கற்...'

'எங்கடை சுண்ணுகச் சந்தையிலும் பார்க்கவோ...? என்றுள், ஆச்சி.

'சுண்ணுகச் சந்தை இதின்ரை கால் தூசுக்கும் காணுது, ஆச்சி! இதுக்குள்ளை போனல், ஒரு குடும்பத்துக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கி வரலாமணே. பிறகு வருவம்... இப்ப பிள்ளையார் கோயிலுக்குப் போவம்!



[சாப்பிடுகிற வயதிலே]

கண்டி வீதியில் நடப்பது, ஆச்சிக்குக் கஷ்டமாக இருந்தது. குறுக்கும் நெடுக்குமாக மோட்டார் வண்டிகள் விரைந்தன. ஒரு புறம் இருந்து, மறு புறம் போக ஆச்சி தயங்கினுள்.

கண்டிப் பிள்ளையார் கோயிலுக்கு வந்த போது கோயில் பூட்டப் பட்டிருந்தது. பதினென்றரை மணிக்குப் பூட்டி விடுவார்களாம்.

ஆச்சி வெளியே நின்று வணங்கினுள்; முகத்தில் பூரணதிருப்தி நிலவவில்லை.

'கடவுளைக் கும்பிடக் கூட நேர காலம் வைக்கிருர்கள்...' என்று கூறிக்கொண்டாள்.

'பல்கலைக் கழக மாணவர்கள் இக் கோயிலுக்குப் பெரிதும் வெள்ளியிலை வருவார்கள். வந்து கும்பிட்டு விட்டு, பிராமணுள் கபே... செல்வா கபே... எதிலாவது... இங்கை ஒரு ஒடையுக்கையும் ஒரு கடை இருக்கு... போய் தோசை சாப்பிட்டுவிட்டுப் போவார்கள்!'

'ஏன் அங்கை தோசை குடுக்கிறதில்லையே...?'

'அது சிங்களச் சாப்பாடு, ஆச்சி! குழம்பிருக்காது... இலை

நேரம் காட்டும் கடிகாரத்தைப் பணம் கொடுத்து வாங்கலாம்! நேரத்தைப் பணம் கொடுத்து வாங்க முடியுமா? நேரத்தின் மகிமையை உணர்ந்து தயாரிக்கப்பட்டதே,

## மில்க்வைற் சலவைப் பவுடர்




துரிதமாகவும், தூய்மையாகவும் சலவை செய்வதற்கு, மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவிக்கப் பழகுங்கள்

ஒரு பைக்கற் மில்க்வைற் சலவைப் பவுடரின் விலை 35 சதங்கள் மட்டுமே! பாவித்த 20 வெற்றுறைகளைச் சேகரித்து திறப்புக் கோவையொன்றைப் பெறுங்கள்.

## மில்க்வைற் சோப் தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: மில்க்வைற்

குழந்தை: தாத்தா, நான் அறையிலிருந்து வெளியே வரும்பொழுது விறுந்தையில் காலில்லாமல் ஏதோ ஓடுவதைக் கண்டேன்.

தாத்தா: ஐயோ... அதென்ன?

குழந்தை: அது தண்ணி தாத்தா.

தாத்தா: ...?...?...?

குழை தான்... ஒரு நாளைக்கு உறைப்பென்றால் எல்லாக்கறியும் உறைப்பாச் செய்வாங்கள்... ஒரு நாளைக்கு எல்லாக் கறியையும் இனிப்பாச் செய்வாங்கள்... உருளைக் கிழங்கை வெட்டிச் சொதி வைப்பாங்கள்... வெங்காயத்தையும் கெக்கரிக் காயையும் வெட்டி சம்பல் போடுவாங்கள்... யாழ்ப்பாணத்துப் பிள்ளையளுக்கு எங்கைபிடிக்கும்... மாட்டிறைச்சியும் இருக்கும்...'

ஆச்சியின் முகம் அருவருப்பால் சுருங்கியது.



'இப்ப தமிழ்ப் பிள்ளையளும் மாட்டிறைச்சி சாப்பிடுவினம், மாமி! இவர் யாழ்ப்பாணத்திலை சாப்பிடுறவர் மாமி. பிளவுஸோ ... ஜனதாவோ... எங்கையோ சாப்பிடுகிறவர்...'

'ஏன் கோள் மூட்டுகிறாய்?' என்றான், சிவராசா.

'சண்டைபிடியாதையுங்கோ எங்கை சாப்பிடுகிறது...?'

'லியன்சுக்குப் போவமா செல்வி...?'

'அந்தச் சாப்பாடு மாமிக்குப் பிடிக்குமா?'

'ஆச்சி எல்லாம்சாப்பிடுவா'

---

ஒருவர்: தமிழ் படித்த பெண்ணை படியினால்தான், மாப்பிளைவெறுக்கிறார்.

மற்றவர்: ஏன், மாப்பிளையின் தந்தை என்ன உத்தியோகம்?

ஒருவர்: அவர்தான் இப்போ தமிழுக்காகப் போராடுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்!

(18)

அந்த ஹோட்டலுக்குள் நுழைந்ததோது, தெரிந்த முகங்கள் பல எதிர்ப்பட்டன. புன்னகையால் முகமன் கூறியபடி சிவராசாவும், செல்வியும் உள்ளே சென்றனர். மேல் மாடியில் ஏறிப்போய், ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்தனர்.

'நல்ல பளிங்கு மேசை!' என்றாள் ஆச்சி. 'எங்களைப் போல இஞ்சை பலர் சாப்பிட வந்திருக்கினம்...'

ஆச்சி எப்ப வந்தனீங்கள்? என்றபடி ஒருவன் வந்தான். சிவராசாவுக்கும் செல்விக்கும் அவனைத் தெரியும் ஆச்சி அவனை உற்றுப் பார்த்தாள்.



(பசியோடையிருக்கிறம் அவன் நோட்டீசு...)

'என்னை... தெரியுதா ஆச்சி?'

'ஓ தெரியுது...நீ சோமற்றை மகனல்லே...?'

அவன் தலையை ஆட்டினான்.

படிப்பு முடிஞ்சுதே...?

இல்லை ஆச்சி இந்த வருஷம் தான் கடைசி...'

கொய்யா ஒழுங்காக் காசு அனுப்புகிறவரே?...நீ ஏதோ ஒருத்தியைப் பார்த்து வைச்சிருக்கிறியாம் என்று கொதிச்சுக்கொண்டு திரிஞ்சார். நீ தம்பி, வீட்டாரை மறந்து போடாதை உன்னை நம்பி குமருகளும் இருக்கு...

நான் அப்பிடி எல்லாம் செய்யமாட்டன், ஆச்சி!...' என்றான் அவன்.

இஞ்சை ஆணையும் பெண்ணையும் சுதந்திரமாகப் பழக விட்டதும் உப்பிடித்தான் ஏதாவது வரும்...வலு கவனமாக இருக்க வேணும், தம்பி! என்று அறிவுரைகள் கூறினாள், ஆச்சி அவன் போய்விட்டான்.

வெயிற்றர் வந்தான்; ஒரு பேப்பரை மேசையில் வைத்துவிட்டுப் போனான்.

பசியோடை இருக்கிறம்... இவன் நோட்டிசு தந்திட்டுப் போறான்...

'இது நோட்டிஸ் இல்லை, மாமி. என்ன என்ன சாப்பாடு இருக்குது என்ற 'மெனு'... இதிலை பார்த்துத்தான் 'ஓடர்' பண்ண வேணும்...'


நீங்க பார்த்து ஓடர் பண்ணி வாறதுக்கை பசி போயிடும்... என்றாள், ஆச்சி.

வெயிற்றர் திரும்பி வந்தான்

'கொஞ்சம் தண்ணி தா, தம்பி!'

'வத்துற...?'

ஒவ்...பொண்ட வத்துற திக்கத் தெண்ட —இது செல்வி.




ஒருவர்:- எங்க அயலில் இரண்டு நபர் இறந்துட்டாங்க.

மற்றவர்:- ஏன் நோய்வாய்ப்பட்டிருந்தாங்களா?

ஒருவர்:- ஒருவர் தனது கட்சி அபேட்சகர் தேர்தலில் தோல்வியடைந்துவிட்டார் என்ற ஏக்கத்தில் இறந்திட்டார் மற்றவர் தனது கட்சி அபேட்சகர் வெற்றியெடுத்திட்டாரென்ற சந்தோஷம் தாங்க முடியாமல் இறந்திட்டார்.

மூன்று கிளாஸில் குளிர்ந்த நீரைக் கொண்டுவந்து வெயிற்றர் வைத்தான். சிவராசா 'ஓடர்' செய்தான்.

'போட்டிரூ திறீ! பிப்ரி பைவ் திறீ...'

என்ன சொல்லுறுன் பிள்ளை

சாப்பாடு கொண்டுவரச் சொல்கிருர்...'

அதுக்கு ஏதோ சொல்லு கிருனே?

செல்வி சிரித்துக் கொண் டாள்.

'இந்த லிஸ்டிலை இருக்கிற சாப்பாடுகளுக்கு நம்பர் இருக் குது மாமி! அந்த நம்பரைச் சொன்னல் அந்தச் சாப்பாடு வரும்...'

'எப்ப வருமோ?...' என்ருள் ஆச்சி.

வெயிற்றர் கோப்பைகளை யும் கறண்டி, கத்தி, முள்ளுக் கரண்டி என்பனவற்றையும் மேசையில் கொண்டு வந்து வைத் தான்.

இதென்ன இதிலை வைச்சே சமைக்கப் போகிருனே? என்ருள் ஆச்சி.

'இல்லை, ஆச்சி! இதாலை தான் சாப்பிடவேணும்...'

'கறண்டி, கத்தியாலையோ? நல்லாத்தானிருக்கும்...எழும்பு போவம்...பட்டினி கிடந்தாலும் இதாலை சாப்பிடமாட்டேன்...'

'அதாலை சாப்பிடாட்டிக் கையாலை சாப்பிடலாம், மாமி! மேக்க எப்பா...பிங்கபோல்ஸ் தெண்ட...'

'ஹிஹீ...'

வெயிற்றர் கோப்பைகளை மூவரின் முன் ஒவ்வொன்ருக வைத்து விட்டு ஒவ்வொரு ரிசூப் பேப்பரையும்...முக்கோண வடி வில் மடித்து...கோப்பையின் கீழ் செருகி விட்டான்.

'இதேன், பிள்ளை?'

'சாப்பிட்டுவிட்டு வாய் துடைக்க மாமி...'

'வாய் கொப்பளிச்சுக் கழுவு கிறதில்லையே...?'

'கழுவலாம்...' என இழுத் தாள் செல்வி.

நேரம் ஊர்ந்தது.

'என்ன சாப்பாட்டை இன் னும் காணவில்லை...இப்பதான் உலை வைக்கிருன்களோ...'

கொஞ்ச நேரம் செல்லும் ஆச்சி.



[கோப்பையளைத்தான் சாப்பிட வேணும்]

கோப்பைகளைத்தான் சாப் பிட வேணும்? வெயிற்றர் ஒரு வழியாகச் சாப்பாட்டுடன் வந் தான் ஒரு பெரிய தட்டில் 'பிறைட்றைஸ்'; ஒரு கோப்பை யில் முட்டைகளும் குழம்பும்; இன்னென்றில் வெங்காயச் சம் பல். ஆச்சிக்கு ஒவ்வொன்றையும் செல்வி விளங்கப்படுத்தினுள்.

வெயிற்றர் கைகழுவ 'பிங்க போல்ஸ்' கொண்டுவந்து வைத் தான்.

'கை கழுவுகிறதில்லையே?'

இதுக்குள்ளை கழுவு, ஆச்சி!'

'கையை வைச்சோ...என்ன குப்பைக் கடையடா இது...' என்று ஒருவாறு கழுவினுள்.

செல்வி பரிமாறினுள்,

வெயிற்றர் ஒரு போத்தி லோடை 'சோசஸ்' சைக் கொண்டு வந்து வைத்தான்.

'இதென்னடா சிவப்பா?'

இது தூள்கூட்டு, ஆச்சி! உறைப்புக் காணுட்டி விட்டுத் தின்னலாம்.

'எல்லாத்தையும் புறம்பாகக் கொண்டு வந்து வைத்தால் நாங் களே சமைச்சுச் சாப்பிட்டிட்டுப் போகலாம்...'

மூவரும் சாப்பிட்டனர்.

என்ன பிள்ளை கொறிக்கி ருய்...நல்லாத்தானே இருக்கு... போட்டுச் சாப்பிடு... நீ என் னடா அவளைப் பார்த்துக் கொண்டு சாப்பிடாது இருக்கி ருய்... சாப்பிடுங்கோ... சாப்பிடு கிற வயதிலை இப்பிடியே சாப்பிடு கிறது..ம்...ம்... சாப்பிடுங்கோ... பிள்ளை, அந்தத் தூள்க்கூட்டை இப்பிடி ஒருக்கா எடு...'

## (19)

மதியச் சாப்பாடு ஒரு வித மாக முடிந்தது.

'மேலை என்ன சாப்பிடுவம், செல்வி?' எனக் கேட்டான் சிவ ராசா.

'இன்னும் சாப்பிடுகி றதோ...? வயித்திலை இனி இட மில்லையடா...' என்ருள் ஆச்சி.

இல்லை மாமி! ஏதாவது 'டேசேற்' சாப்பிடுவம்... புருட் செலட் எடுப்பியுங்கோ!'

'அது என்ன பிள்ளை...'


எல்லா வகைப் பழங்களையும் வெட்டிப் போட்டுச் செய்தது... நல்லாயிருக்கும்.

வெயிற்றர் வழக்கத்தின்படி சற்று நேரம் கழித்துக் கொண்டு வந்து வைத்தான்.

இது எங்கடை கோயில்களில் கொடுக்கிற பஞ்சாமிர்தம் எல்லோ? இதையே இஞ்சை பெயரை மாற்றிவிக்கிருன்கள்...' என்ருள் ஆச்சி வியப்புடன். 'அது என்ன மாதிரி இருக்கும்...இதுக் குள்ளை ஒரே பப்பாப்பழமும், அன்னுசிப் பழமுந்தான்.

சிவராசாவும் செல்வியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

(தொடரும்)



# செய்திச் சோலை

இலங்கையில் சாராயம் குடிக்கும் பெண்கள் தொகை கூடுகின்றது.
— செய்தி

வெளிவந்துவிட்டது! கவர்ச்சியும் அழகும் நிறைந்த, வண்ண மூடிகளுடன் சாராயப் போத்தல்கள் விற்பனைக்கு வந்துள்ளன.
—செய்தி

ஃ

விஞ்ஞான முன்னேற்றத்தையும் உலக சமாதானத்தையும் முக்கியமாகக் கருதும் நம் நாட்டில் எந்த ஒரு உயிரையும் அநியாயமாக அழிய விடமாட்டோம்
—அப்பலோ 12 வீரர்கள்.

40,000 அமெரிக்க வீரர்கள் வியட்நாம் யுத்தத்தில் இதுவரை உயிரிழந்துள்ளனர்.
—டைம் பத்திரிகைச் செய்தி

ஃ

தன் பிள்ளைகளின் பசியை உணர்ந்து பரிமாறும் ஒரு தாயிடம்தான் எங்கள் நாட்டை ஒப்படைக்க வேண்டும்.
—என். எம். பெரேரா.

அடுத்த முறை கூட்டணி பதவிக்கு வந்தவுடன் எங்களை ஆதரித்தவர்களுக்கே முதலில் எல்லா உதவிகளும் செய்வோம்.
—கே. பி. ரத்நாயகா-எம்.பி.

எக்ஸ்போ-70 உலகக் கண்காட்சியில் போக்குவரத்தைக் கண்காணிப்பதற்காக இலங்கைப் போக்குவரத்துப் போலீசைச் சேர்ந்த சார்ஜன்ட் உடப்பன ஜப்பான் செல்லவிருக்கிறார்.
—செய்தி

இலங்கைப் போக்குவரத்துப் போலீஸ்காரர் ஒருவர் பாராளுமன்றத்தின் முன்னால் பஸ்ஸிலிருந்து இறங்குகையில் தவறி விழுந்து படுகாயத்துக்குள்ளானார்.
—செய்தி

ஃ

பணம் சேர்ப்பதையே குறியாகக் கொண்ட தமிழ் நாட்டுக் குப்பைப் படங்களின் சேர்க்கையால் வடநாட்டு ஹிந்திப் படங்கள் பாழாகின்றன.
—திரைப்பட விமர்சகர்
திருமதி கரஞ்சியா.

தமிழ் நாட்டு பாலக்காடு மணியின் மிருதங்கமும், எனது சித்தாரும் சேர்ந்து இரண்டறக் கலக்கும்போது, ஓர் அருமையான தெய்வீக உணர்ச்சி உண்டாவதை நான் உணர்கின்றேன்.
—வட நாட்டு 'சித்தார்'
மேதை ரவிசங்கர்.

'மகாவலி'யின் ஓட்டத்தை நிறுத்த எண்ணும் எவரும், அந் நதியிலேயே மூழ்கிவிடுவார்கள்.
—பிரதமர்.

இலங்கை திரைப்படப் பகுதியினர், உலக வங்கி பத்திரிகையாளர்களுக்குக் காட்டிய படத்தில், மகாவலி கங்கை மேல் நோக்கி ஏறிப் பாய்ந்தது.
—செய்தி.

ஃ

மட்டக்களப்பு நகர சபையினர், அங்குள்ள அரச மரத்தடிப் பிள்ளையார் கோவிலைத் தகர்த்தெறிந்தபோது, திரண்டிருந்த பக்தர்கள் கண்ணீர் விட்டனர்.
—செய்தி.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு இன்னும் கூடுதலான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும்.
—உதவி நிதி மந்திரி
என். விமலசேன.

---

ஆண்களிடமுள்ள மிருகத்தனத்தைக் குறைத்து, அவர்களிடமுள்ள குழந்தைத் தனத்திற்குப் பயிற்சியளிப்பதுதான் பெண்களின் கடமை.
-டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

---

# திருமணமாம்... திருமணமாம்

"சுமணி"

"கங்கிராஜுலேஷன்ஸ்- எப்ப கல்யாணச் சாப்பாடு போடப்போறே"

சிடைக்கிற சம்பளத்திலே இப்ப அதுதான் ஒண்ணு குறைச்சல்.

ஒனக்கென்னப்பா குறைவு- நல்ல அரசாங்க உத்தியோகம். பொக்கட் நிறைய சம்பளம். நேரத்திற்கு ஒரு டெரலின்; பொழுதுக்கொரு டெட்ரான்னு வெளுத்துக்கட்டறே- இன்னம் ஏன்ப்பா சலிச்சிக்கறே. காலா காலத்திலே கலியாணத்தைப் பண்ணி... பிள்ளைகுட்டிகளை...

ஸ்டாப்... ஏண்டா என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிறீங்க. என்னமோ... வருஷப் பிறப்பு அட்வான்ஸ் வாங்கி இரண்டு ஜோடி டெரலினை வாங்கி வைச்சுக்கிட்டு, தோய்ச்சி தோச்சி போட்டுகிட்டு வரேன். இருக்கற வெலைவாசியிலே கல்யாணத்தை நெனைச்சா கடுக்கா கொடுக்கற மாதிரி இருக்குடா... நீ என்னடான்னு...பிள்ளையாம்... குட்டியாம்.'

அப்ப ஏண்டா நேத்து பொண்ணு பாக்கப்போனே!

அம்மாவோட தொண தொணப்பு சகிக்கலே. உயிரை வாங்கறு... அதுனலேதான் தட்டிக் கழிச்சிட்டேன், பொண் பாத்துட்டு வந்து. இன்னம் கொஞ்ச காலத்துக்கு நிம்மதி.

'அப்ப... இன்னம் எவ்வளவு காலத்துக்கு பிள்ளையாரோட போட்டி போடப் போறே!'

முடிஞ்சவரைக்கும் தள்ளிப் போடுவோம்... அம்மா தங்கச்சி ரெண்டு பேரும் வீட்டிலே இருக்காங்க. நேரத்துக்குச் சமைச்சுப் போடறுங்க... ஏதோ இருக்கறதை டிப்டாப்பா போட்டுக்கிட்டு, சினிமா ட்ராமான்னு ஜாலியா இருக்க முடியறது. கலியாணத்தைப் பண்ணிக்கிட்டா இப்பிடி ஜாலியா இருக்க முடியுமா. பெண்டாட்டி வருவா... 'என்னங்க சாயந்தரம் சீக்கிரமா வரீங்களாம்பா... கண்மூடி முழிக்கமுன்னே குவா...குவா... ஆஸ்பத்திரி... டாக்டர்... ஓடிக்கோலன்...கிரைப் மிக்சர்... இப்பிடி அலையத்தான் சரியா இருக்கும். அப்பறம் எங்கப்பா நிம்மதி'

மேற்கண்ட சம்பாஷணை கண்ணனுக்கும் எனக்கும் நடந்து கிட்டத்தட்ட பத்து வருடங்கள் இருக்கும். கண்ணன் சுமாரான பணவசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவன். ஒரே ஒரு தங்கை தான். குடும்பஸ்தனுக வெகுநாள் ஆகாது என்றுதான் நினைத்தோம். எங்களுக்கோ...? வீட்டுப் பொறுப்பு, பொருளாதாரப் பிரச்சினைகள் -இப்படி பல தடைகள் இருந்தன, வாழ்க்கைக் கடலில் குதிக்க.

ஆனல் வசதி படைத்த கண்ணன் கூறிய காரணங்களோ...? புதுமையானதாக இருந்தன.

ஆனல் இன்று கண்ணனைப் பார்த்தபோது... அதுவும் பத்து வருடங்களுக்கு, நான் இங்குமங்குமாக வேலை மாற்றம் என்ற பெயரால் பந்தாடப்பட்டு, தாய் தகப்பனைக் கரை சேர்த்து, எனக்கென்று கழுத்தைக் காலியாக வைத்துக்கொண்டிருந்த சரோஜாவை 'திருமதி'யாக்கி (திரு... தான் என் பெயர் ஐயா) இப்போது சேகரையும், ராஜாத்தியையும் பள்ளிக்குக் கூட்டிக் கொண்டுவரும் புதுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு (என் பிள்ளைகளை நான் கூட்டிக் கொண்டு போகாமல் வேறு யார் கூட்டிக்கொண்டு போவார்கள்) இப்படி போகிறது என் காலம்.

□

அன்றுதான் நான் ஊருக்கு மாற்றலாகி வந்த ஏழாம் நாள். கண்ணனைத் திடீரென்று சந்தித்தவுடன்... என் கண்களையே நம்பமுடியவில்லை அத்தனை மாற்றம்.

உறிஞ்சிக் குடிக்கப்பட்டது போன்ற உடம்பு பிளேடை சந்தித்து நான்கு நாட்களாகவாவது இருக்கும் முகம். ஒரு அழுக்கேறிய சட்டை, கசங்கிய காற்சட்டை, நாங்களும் வந்துவிட்டோம் என்று அங்கொன்று இங்கொன்ருகத் தலை நீட்டும் நரை ரோமங்கள். போதாக் குறைக்கு கையில் ஒரு கூடை, நிறைய காய்கறிகள்...

'டெரலின்... டெட்ரான் சினிமா... அழுக்குக் கூடை, நாலு நாள் தாடி...காய்கறிக் கூடை'

'ஏண்டா இது என்னடா கோலம்'

---

**பணக்காரனுக்கு ஏழை உறவினர் உயிருடன் இருப்பது தெரியாது.**

—ஸ்பானிஷ்

---



**ஒருவர்:** என்னப்பா, வாயை மூடிக்கொண்டு டெலிபோன் பேசு கிறாய்.

**மற்றவர்:** சாராயம் குடித்தனுன்... மணக்கும்.

—தும்பளை சாம்பு

'ஹூம்... எல்லாம் என் தலை யெழுத்துடா...' பாவம். கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போன்ற குரல் மாற்றம்.

'ஏண்டா பாவி கலியாணத்துக்கு ஒரு இன்விடேஷன் கூட அனுப்பவில்லையே! எப்படா குடும்பஸ்தனு மாறினே?'

'டேய்...பத்து வருஷத்துக்கு அப்புறம் சந்திச்சிருக்கோம். உங்கிட்டே நிறையப் பேச ஆசையா இருக்கு. ஆனு வேலை தலைக்கு மேலே இருக்கு. சாயங்காலம் வீட்டுக்கு வர்ரியா... நடுத்தெரு 16ம் நம்பர்...சாவகாசமா பேசுவோம்.'

கண்ணன் நடக்கவில்லை. பறந்தான்.

கலியாணம் பண்ணி குடும்பம் பெருத்துவிட்டது போலும். எப்படி இருந்த பய எப்பிடி மாறிட்டான்.'

□

எப்போது அந்தி வரும் என்று என் மனம் பரபரத்துக் கொண்டிருந்தது. வழக்கமான கடமைகளை முடித்துவிட்டுக் கண்ணனைப் பார்க்கப் புறப்பட்டேன்.

'அங்கே போய் வளவளன்னு பேசிக்கிட்டிருக்காம சுருக்கா வாங்க' என் பாதி சரோஜா வழியனுப்பினுள்.

காலிங் பெல்லை அழுத்தினேன்.

தலைமுடி கலைந்து நெற்றியில் விழ, வியர்வை ஆறுகப் பெருக, கண்ணன் கதவைத் திறந்தான்.

'எக்ஸ்யூஸ்மி... டேக் யுவர் சீட்... அடுப்பிலே கறி கொதிக்குது. இறக்கி வைச்சுட்டு பை மினிட்ஸ்லே வரேன்.'

'டோன் வொரி...டேக் யுவர் ஒன் டைம்'

என் மனம் கண்ணனுக்காக 'வொரி' பண்ணியது.

உள்ளே குழந்தை அழும் சப்தம் - தொடர்ந்து கண்ணன் உள்ளே ஓடல்.

சோபாவில் அமர்ந்த என் சிந்தனை-பாவம் கண்ணன் ரொம்பக் கஷ்டப்படருன். வீட்டு வேலையெல்லாம் அவன்தான்... மிஸிஸ் பெரிய சோம்பேறி போல இருக்கு... இல்லை நோயாளியோ என்னமோ?

கலியாணம் முடிஞ்சு இத்தனை வருஷத்தில் நான் ஒருநாள் கூட சமைக்கல்லையே! அட சமைக்காவிட்டாலும் அழுத குழந்தையை சமாதானப்படுத்தினது கூட இல்லையே!

கண்ணன் கலியாணம் பண்ணிக் கஷ்டப்படும் கதையை அறிய என் ஆவல் அதிகமாயிற்று

கண்ணன் ஒரு மாதிரியா கடைசியில் வெளியே வந்தான். அவன் தோளில் ஒரு இரண்டு வயதுக் குழந்தை முனங்கிக் கொண்டிருந்தது.

'ஒன்னைப் பார்த்தா பாவமா இருக்குடா... உன் சம்சாரம் சமைக்க மாட்டாளா... இவன் தான் மூத்த பையனு!

உள்ளே இருமும் சப்தமும், அதைத் தொடர்ந்து கண்ணனை கூப்பிடலும்.

---

**நாமெல்லோரும் ஆதாமின் குழந்தைகளே! உடுக்கும் பட்டில்தான் வேறுபாடு.**

—ஸ்விடிஷ்

'இருடா... அம்மா கூப்பிடரு வர்ரேன்' கண்ணன் உள்ளே ஓடிணுன்.

என்ன இருந்தாலும் இந்தக் காலத்துப் பெண்களே சுத்த மோசம். கந்தோரிலே கஷ்டப் பட்டுட்டு வந்த புருஷன், கரண்டியும் கையுமா நிக்கிருன்.

அழுகிற பிள்ளை... நோய்க்கார அம்மா... இப்படியெல்லாம் வீட்டிலே இருக்கும்போது...... இந்த பொம்பிளேகளுக்கு சினிமா, கிளப், இதெல்லாம் என்ன வேண்டியிருக்குது. என் சரோஜா அப்பிடி இல்லே தப்பிச்சேன்.

என் மனம் அலேபாயவும், கண்ணன் திரும்பி வரவும் சரியாக இருந்தது.

'ஏண்டா என் கேள்விக்கு இன்னம் பதில் சொல்லலேயே! எப்படா கலியாணம் பண்ணினே? மிஸிஸ் எங்கே கிளப்புக்கா... சினிமாவுக்கா...'

'டேய் கொஞ்சம் மூச்சு விடுடா... எனக்கு இன்னம் கலியாணமே ஆகலேடா!'

அப்ப இந்தக் குழந்தை... ஓஹோ... ஹோ...ஹோ... ... ...

'என்னடா ஓஹோ... ஹோ ஹோ...

'நான் கலியாணம் பண்ணிணு ஜாலியா இருக்க முடியாதுன்னு, கலியாணத்தை தள்ளிப் போட்டுக்கிட்டே போனேனு! வயசு வளந்திகிட்டே போச்சு. என் தங்கச்சி லவ் பண்ணிக் கலியாணம் முடிச்சுகிட்டு போயிட்டா. அம்மாவோ சுகமில்லாம படுத்திட்டா.

வீட்டுச் செலவு மட்டும் கூடிப் போயிட்டா பரவாயில்லே! தங்கச்சி மொதலா எல்லா சொந்தக்காரர்களுக்கும், அவங்க அவசரத்துக்கு திருப்பிக் கொடுக்காத கடன் கொடுக்கற நான்தான் அவங்க பாங்க்.' இல்லேன்னு... உனக்கென்னடா செலவு தனிக்கட்டைங்கருங்க.

தங்கச்சிக்குக் கலியாணம் செய்து கொடுத்தோம். இப்ப மூணுவது பிரசவம். அவ ஆஸ்பத்திரியிலே. இங்கே நான்தான் சமையல்...எல்லாம்.

'என்னங்க சாப்பிட்டிங்களா'ன்னு கேட்க ஆளில்லே. கலியாணத்தைப் பண்ணிக் காலா காலத்திலே ஒண்ணை ரெண்டை பெத்து வைச்சிருந்தாலும் 'டேய் சிகரட் வாங்கிட்டு வாடான்னு' பையனை விரட்டலாம். இந்தாம்மா இந்த சட்டையைக் கொஞ்சம் சோப்பு போட்டு தோச்சு போடருயான்னு பொண்ணை வேலேவாங்கலாம். ஆனு...இப்ப சுகமில்லாத தாயை பார்க்க, கந்தோர் வேலே எல்லாம் சேர்ந்து என்னை 30 வயதிலே 50 வயசுக் கிழவனுக்கிட்டுது.

'இப்ப கலியாணத்தை செய்துகிட்டா போச்சு.'

நானும் அதுக்குத்தான் முயற்சி பண்ணினேன். அவனுக்கு இவ்வளவு நாள் கலியாணம் ஆகாம இருக்கணும்னு! ஏதோ காரணம் இருக்கணும். என்ன நோயோ... இல்லே வேற எங்கே யாவது... அப்பிடின்னு கதை வந்துட்டுது.

ஹூம் கலியாணம் செய்துக் காமலே குடும்பஸ்தனுயிட்டேன். எனக்கு இனிமே எங்கே கலியாணம்... பிள்ளையார்தான்.

ஆகையால் மெய்யன்பர்களே!...

---

# சிரித்திரு

உங்கள் குழந்தை அழுவதை நிறுத்த வேண்டுமா? இதோ ஒரு லேசான வழி! நீங்களும் குழந்தையைப் பார்த்துக் கத்துங்கள், தன்னை யாரும் கவனிக்க வேண்டும், என்ற எண்ணத்துடனேயே குழந்தை அழுவதால், உங்கள் சப்தம் கேட்டுத் தன் அழுகையை நிறுத்தி விடும்!

—ஒரு தாயாரின் கண்டுபிடிப்பு.



---

அமைதியான சமுத்திரத்தில் எல்லோரும் சிறந்த மாலுமிகளே.

—ஸ்விச்சர்லாந்து.

# நகைத் தேன்

மனைவி: கொழும்பில் ஒரு வீடு எப்படியோ கஷ்டப்பட்டு எடுத்துவிட்டோம். கிரகப் பிரவேசத்திற்கு சுப தினம் ஏதாவது பார்த்து வந்தீர்களா?

கணவன்: ஓ! நேற்றே பார்த்துவிட்டேனே. முத்துராம னும்,புஷ்பலதாவும் நன்ருக நடிச்சிருக்காங்க.

மனைவி: ?...?...?...

—பா. வசந்தா, கிரான்பாஸ்.



டாக்டர்: உங்களுக்கு உடம்பிலே புரோட்டின் குறை வாக இருக்கு. நல்லா மீன் சாப்பிடுங்க.

மற்றவர்: ஐயய்யோ!... நான் சுத்த சைவமாச்சே! மீனை என் கண்ணிலே காட்டக் கூடாதே.

ஒருவர்: விவேகப் போட்டியில் எல்லாக் கேள் விக்கும் பதில் சொல்லிவிட்டேன், ஒரு கேள்விக்கு மாத்திரம் பதில் சொல்லாமல் திணறிவிட்டேன்.

மற்றவர்: என்னப்பா உன்னைத் திணற வைச்ச அந்தக் கேள்வி?

ஒருவர்: 'இன்றைக்கு என்ன நாள்' என்று கேட்க, சொல்ல முடியாமல் போய் விட்டது.

மற்றவர்: இலங்கையில் 'போயா' வந்ததற் குப் பிறகு இந்தக் கேள்விக்கு ஒருவ ராலுமே பதில் சொல்ல முடியாது.

—ஜோக்கிரடீஸ்.

+

வீட்டுக்காரர்: வாங்க ஐயா! 'ஐந்து வருஷத் துக்குப் பிறகு இன்றைக்குத் தான் நம்ம வீட்டுக்கு வந்திருக்கிறதைக் கண்டிருக்கேன்.'

எம். பி: 'மன்னிக்கவேண்டும். உங்களைப் பற்றியும் உங்க வீட்டைப் பற்றியும் நினைத்தவண்ணமே தான் இருந் தேன். என்ன செய்யலாம் லீவு கிடைப்பதில்லை. இனிமேல் தேர்தல் முடியும் வரை லீவுதான். அடிக்கடி உங்க வீட்டுக்கு வர எண்ணியுள் ளேன்.'

— 'பதியதளாவ பாறூக்'

+

ஆசிரியர்: இராமு நீ ஏன் சோமுவுக்கு அடித் தாய்?

இராமு: 'தன் தந்தை தான் பெரிய குடிகாரன்' என்று கூறி, என் தந் தையை இவன் மட்டமாகப் பேசினுன் சார்.

ஆசிரியர்: ?...?...?

—பற்குணு சித்தன்கேணி.

+

மீன் வாங்க வந்தவர்: தம்பி இந்த மீன் என்ன விலை?

மீன்காரன்: 3ரூபா ஐயா.

மீ.வா.வ: தம்பி கடல்லே ஓடுற மீன் உனக் கும் சொந்தம்; எனக்கும் சொந்தம். நீ பிடிச்ச கூலியைச் சொல்லு.

மீன்காரன்: ?...?...?

—நயினை மு. பரமேஸ்.

மதிப்புரை:

# வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை

ஆசிரியர்: சி. தில்லைநாதன், எம். ஏ; விரிவுரையாளர், இலங்கை பல்கலைக்கழகம்.
விலை: ரூபா 2-50.
வெளியீடு: தமிழ்ப் புத்தகாலயம், 576 பைகிராப்ஸ் ரோடு, சென்னை-5.

தமிழ் இலக்கியம் கடல்போற் பரந்ததென்பர். அவ்விலக்கியம் துறைபோகக் கற்றுக் கரைகாண்பதென்பது முடியாத ஒரு காரியமாகும். எனவே தமிழார்வம் மிக்கோர் இலக்கியங்களை எளிதிற் படிப்பதற்கு வழிகாண வேண்டும். 'ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்' என்பர். அது போன்று தமிழ் இலக்கியப் பரப்பை நாம் ஒவ்வொரு காலப் பகுதியாக வகுத்துக்கொண்டு, அக்காலப் பகுதியிலே தமிழ் இலக்கிய நெடுஞ் சோலையிலே காணும் பெரிய மைல் கற்கள் போன்ற புலவர் பெருமக்களின் இலக்கியப் படைப்புக்களையாவது துறைபோகக் கற்றோமேயானால் ஒருவாறு இலக்கிய வரலாற்றோட்டத்தைக் கண்டனுபவித்தவர்களாவோம்.

இந்த அடிப்படையிலே நாம் தமிழிலக்கியச் சோலையிலே நுழைந்து சங்கச் சான்றோர்களாகிய கபிலபரணர், அதற்குப் பின்னர் வள்ளுவன், இளங்கோ, கவிச் சக்கரவர்த்தி கம்பன், குமர குருபரர், புரட்சிக் கவிஞன் பாரதி, புதுமைப்பித்தன், கண்ணதாசன் ஆகிய புலவர் பெருமக்களின் இலக்கியப் படைப்புகளைக் கண்டு, அவற்றைப் படித்துத் தமிழ் இலக்கிய நெறியினை நாம் அறிந்துகொள்ளலாம். இத்தகையதோர் நோக்கிலே நல்லதொரு வழிகாட்டியாக அமைந்திருப்பது சி. தில்லைநாதன் அவர்களின் 'வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை' என்ற நூலாகும். நாம் கூறியவாறு தமிழ் இலக்கியப் பரப்பில் ஆங்காங்கு கொடுமுடிகளாகத் திகழும் புலவர் பெருமக்களின் இலக்கிய நெறியினை இந் நூலில் திரு. தில்லைநாதன் அவர்கள் ஆராய்ந்து எழுதியுள்ளார்கள்.

சிறப்பாக இந் நூல் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் இலக்கிய வரலாற்றைப் பயிலும் மாணவர்கட்கும் மற்றோருக்கும் பெரிதும் பயன்படக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

இலக்கிய நெறிக்கும் மொழி வளர்ச்சிக்கும் சமுதாயமுன்னேற்றங்களுக்கும் இடையிற் பிரிக்க முடியாத ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. இந்த உண்மையை இலக்கியம், இலக்கிய வரலாறு கற்போர் மனதில் நன்கு பதிய வைத்துக்கொள்ள வேண்டும். இக்கருத்தைத் தில்லைநாதன் அவர்களும் தமது உள்ளத்திலே அடி அத்திவாரமாக வைத்துக்கொண்டு இலக்கிய கர்த்தாக்களைப் பற்றிப் பரிசீலனை செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.


தமிழிலக்கியப் பரப்பினை நோக்குவோர், தமிழர் சமுதாயம் இற்றைவரை பல்வேறுபட்ட எத்தனையோ பிரச்சனைகளையும் அனுபவங்களையும் கண்டனுபவித்து பல்வேறு துறைகளிற் சிந்தையைச் செலுத்திப் பல்வேறு கோணங்களில் ஆய்வுகளை நடாத்தியதை அவதானிக்கலாம். இந்த அவதான நோக்கு இந்நூலில் இழையோடுவதை நாம் படித்தறியலாம்.

இந் நூலில் வள்ளுவன், இளங்கோ, ஆண்டாள், கம்பர், இஸ்லாமியப் பக்திப் புலவர்கள், ஆறுமுகநாவலர், தாமோதரம் பிள்ளை, மாதவையா, இக்பாலும்-பாரதியும், புதுமைப்பித்தன், மறைமலையடிகள், தேசிக விநாயகம்பிள்ளை, பாரதிதாசன், ஆகியோரின் இலக்கிய சிருட்டிகளை மையமாகக் கொண்டு இவர்களின் தனித்துவத்தையும் இவர்களின் இலக்கிய நெறியினையும் நன்கு ஆராய்ந்துள்ளார். சிந்தனை காலத்தின் போக்கிற்கேற்பக் கருத்து வளர்ச்சி, மொழி வளர்ச்சி என்பன அமைந்து காணப்படும் என்ற உண்மை நூல் முழுவதும் பரந்திருப்பதை நாம் அவதானிக்கலாம்.

மனிதவியலின் பல்வேறுபட்ட கோணங்களில் நின்று நோக்கி 'வள்ளுவன் வான் மறை செய்தான்' என்ற கட்டுரையை ஆசிரியர் எழுதியுள்ளார். திருக்குறளின் இலக்கிய அந்தஸ்தையும், அதனால் தமிழர் பெருமிதமடைவதையும் எடுத்துக் கூறும் ஆசிரியர், அக் கட்டுரையின் இறுதியிற் கூறுவதை நாம் எடுத்துக் காட்

ஒருவன்: என்னப்பா, நீ கொஞ்சம் கூட ஒரு கொள்கை இல்லாதவனாக இருக்கிறியே! எல்லாக் கட்சிக் கூட்டத்துக்கும் போய், எல்லா கட்சிக் காரரையும் வால் பிடிக்கிறியே!

மற்றவன்: கட்சிக் கொள்கையைக் கடைப் பிடிச்சா என்னாலே வாழமுடியாது....! ஏன்னா! நான் ஒலி பெருக்கி வாடகைக்கு விடுபவன் ஐயா.



டாமல் இருக்க முடியாது. 'வள்ளுவரின் பெயரைச் சொல்லித் தமிழ் மக்கள் பெருமைப் பட்டது போதும். திருவள்ளுவராலே தமிழ் மக்கள் பயன்பெற்றுச் சிறப்படைவார்களேயானால், அது திருவள்ளுவருக்குப் பெருமை சேர்ப்பதாகும்... எந்தத் தமிழ் மக்களுக்குத் திருக்குறள் வான்புகழ் ஈட்டிக் கொடுத்ததோ அந்தத் தமிழ் மக்கள் திருக்குறளாற் பயனெய்தத் தவறிவிட்டனர் என்று உலகம் பழியாதோ', இவ்வாறாகத் தில்லைநாதன் அவர்கள் தமிழர் சமுதாயத்திற்கு அறிவு புகட்டுவது எதிர்காலச் சமுதாயத்திற்கு எழுச்சியூட்டும் எண்ணக் குவியலாக அமைந்திருக்கிறது எனலாம்.

ஆறுமுகநாவலர், தமிழார்வம் நிறைந்த தாமோதரம்பிள்ளை என்னுங் கட்டுரைகளையும் ஆசிரியர் புதிய நோக்கிலே சமுதாயப் பிரச்சினைகளுடன் இணைத்து-ஆராய்ந்து தமது உள்ளக் கிடக்கைகளைக் கூறியிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். ஆசிரியரின் விமர்சன நோக்கிற்கும், ஒப்பியல் நோக்கிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக 'இருதேசியக் கவிஞர்கள்- இக்பாலும் பாரதியும்' என்ற கட்டுரை விளக்குகின்றது.

மாதவையாவின் நாவலிலும் புதுமைப்பித்தனின் சிறுகதைகளிலுமுள்ள குறைநிறைகளை எடுத்து விளக்கிச் சொல்வதோடு, பாரதிதாசன், தேசிகவிநாயகம்பிள்ளை ஆகிய கவிஞர்களின் கவிதைப் படைப்புகளையும் ஆராய்ந்தெழுதியுள்ளார். எனினும் இத்துறைகளில் ஆய்வு நடாத்துவதற்கு இன்னும் பல வாய்ப்புக்கள் உள.

'மறைமலையடிகளின் இயக்கம்' என்னும் கட்டுரையில், அடிகள் வாழ்ந்த காலச் சூழ்நிலையையும் அச் சூழலில் அவர் நடாத்திய தனித் தமிழ் இயக்கத்தின் அவசியத்தையும் அறியக் கூடியதாகவுள்ளது. இக் கட்டுரையின் இறுதியில் 'மக்களின் மன வளர்ச்சிக்கு உதவவல்லது தாய்மொழி மூலம் ஊட்டப்படும் கல்வியே என்பது உலகமேற்றுக் கொள்ளும் உண்மையாகிவிட்ட பின்னரும், தமிழ் மொழி பயிற்சி மொழியாவதை விரும்பாத சிலர் தமிழரிடையே வாழ்கிறார்கள்...' (பக்-110) எனக் கூறுவதைக் கொண்டு தில்லைநாதன் அவர்களின் நோக்கமும் தனித்துவமும் புலப்படுவதைக் காணலாம்.

**மூளைக் கோளாறு இல்லாதவர்களுக்கென்று அமெரிக்காவில் ஒரு விடுதி இருக்குமானால், அது காலியாகத் தான் இருக்கும்.**

—பெர்னாட்ஷா.

தில்லைநாதன் அவர்கள் பல்கலைக்கழகத்தில் தாம் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, மாணவர்களின் அறிவியல் நோக்கிற்கேற்ப, அவர்களின் உள்ளத்தைக் கவரத் தக்க வகையில் இக்கட்டுரைகளை எழுதியுள்ளார்' இந்நூல் தமிழ் இலக்கியப் பரப்பினுள் நுழையும் இலக்கியப் பிரியர்களுக்குச் சிறந்ததொரு நுழைவாயிலாக - நல்ல ஒரு வழிகாட்டியாக அமையும் என நம்புகின்றேன்.

—இ. பாலசுந்தரம் [உதவி விரிவுரையாளர்], தமிழ்த்துறை, இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.




அம்புலிமாமா

சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் மாதப் பத்திரிகை

இலங்கை முழுவதும் சப் ஏஜண்டுகள் தேவை.

சோல் ஏஜண்ட்

த. தம்பித்துரை அன் சன்ஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பொம்மை



கலையுலகின் பெருமைப் பெட்டகம்

இலங்கை முழுவதும் சப் ஏஜண்டுகள் தேவை...

சோல் ஏஜண்ட்

த. தம்பித்துரை அன் சன்ஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




சொ. பத்மநாதன், 481 காலி ரோட், கொழும்பு-3.
[வர்த்தகர், கலாரசிகர்]

ஆ. சோமலிங்கம், 481 காலி ரோட், கொழும்பு-3.
[வர்த்தகர், கலா ரசிகர்]

எஸ். எம். பரீட் மொஹமட் (18), கண்டக்குடா, தலைவில்.
[வானொலி கேட்டல், பேனாநண்பர் தொடர்பு]

ஏ. எச். எம். ஜெமால்டீன், 194ஏ, பண்டாரநாயக்கா வீதி, கொழும்பு-12.
[கால்பந்தாட்டம், சினிமா]

ச. ஜெகதீஸ்வரன்(12), பிள்ளையார் கோவிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
[கதை வாசித்தல், வானொலி கேட்டல், சிரித்திரன் போன்ற பத்திரிகைகளை வாசித்தல்]

எஸ். குமார்(18), 44, டி.ரி.பி ரோட், அரசரடி, மதுரை-10.
[முத்திரை சேகரித்தல், முதல் நாள் உறை சேகரித்தல், பேனா நண்பர் தொடர்பு]

எம். ஜே. வஸீர் முஹம்மட் (20), 107, பிரின்ஸெஸ் கேட், கொழும்பு-12.
[புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்]

அ.அரசு(22), வட்டார இல:6 சேனையூர், மூதூர்.
[கவிதை எழுதல், கதை படித்தல், சித்திரம் தீட்டுதல், விளையாட்டு]

சி. ஜெகதீஸ் வரன் (17), ஈஸ்வரி ஆலை, நல்லூர்ச் சந்தை- யாழ்ப்பாணம்.
[முத்திரை சேகரித்தல் வானொலி கேட்டல்- சஞ்சிகை வாசித்தல்]

கே.வி.எம்.பஞ்சரட்ணம் (20) சம்மளக் குளம், புளியங் குளம்.
[பத்திரிகை பார்த்தல், வானொலி கேட்டல் கமத்தொழில்]

நா. ருதாரும் (17), தொண்டமனாறு,
[தபால் தலைகள் சேகரித்தல்]

த. இமயபாலன் (20), வட்டாரம்- 8, வல்லன், புங்குடு தீவு
[வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், பேனா நண்பர்கள் தொடர்பு]

வ. மயிலழகன்(17), இல:18, ஓரஞ்சி பீல்ட் ரோடு, இறக்குவானை.
[முத்திரை சேர்த்தல், கதை படித்தல், பேனா நண்பர் தொடர்பு]

கோ. நாகரத்தினம் (18), 230/1 பண்டாரநாயக்க மாவத்த கொழும்பு- 13.
[தபால் தலை சேகரித்தல், இலக்கிய நூல்கள், பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்]

ஆர். இராம நாதன் (19), இல. 81, பிரதான வீதி, தெனியாய.
[சினிமா பார்த்தல், வானொலி கேட்டல், கதை- கட்டுரை எழுதல்]

த. இராசதுரை(22), பூவரசன் குளம், வவுனியா.
[அறிவுள்ள நூல்கள் படிப்பது, பேனா நண்பர்கள் தொடர்பு, படம் பார்த்தல்]

ச. பத்மகாந்தன்(17), மே/பா:கி.சபாரட்ணம், பழைய புகையிரத வீதி, கொக்குவில்.
[புகைப்படம் பிடித்தல், இயந்திரம் திருத்துதல், மற்றும் பொதுவான பொழுது போக்குகள்]

**பேனா நண்பர் விண்ணப்பப் பத்திரம்**

பெயர்: ___________________

முகவரி: ___________________

___________________

பொழுதுபோக்குகள்: ___________________

___________________

தயவு செய்து பேனா நண்பர்கள் பகுதியில் எனது பெயரையும் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்காக இத்துடன் சிரித்திரன் 1வருட சந்தாப் பணம் அனுப்பியுள்ளேன்.

_______ திகதி

_______ கையொப்பம்

**வாசகர்களே! 1வருட சந்தா செலுத்திப் பேனா நண்பராகுங்கள்.**

EMPEE INDUSTRIES

Selvam

எம்பீ இன்டஸ்ட்ரீஸ்

එම්පී ඉන්ඩස්ට්‍රීස්

# EMPEE INDUSTRIES

TEXTILE MANUFACTURERS
&
TEXTILE YARN DYERS.

**PALLANSENA, KOCHCHIKADE.**

*Sole Distributors for Textile Products.*

**SILK PALACE, KOCHCHIKADE.**

# எம்பீ இன்டஸ்ட்ரீஸ்

புடவை உற்பத்தியாளர்கள், நூல் சாயம் தீட்டுவோர்

பள்ளன்சேனை, கொச்சிக்கடை

ஏக வினியோகஸ்தர்கள்:

சில்க் பலஸ், கொச்சிக்கடை.

பீடி புகைப்போருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

## யானை பீடி ஸ்பெஷல்

குணம் மணம் நிறைந்தது

ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே!

இலங்கையில் தரம் குறையாமல் தயாரிக்கப்படுவதும், தனக்கென ஒரு தனியிடத்தை வகுத்துக் கொண்டதும்

ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே!

எல்லோரும் விரும்பிப் புகைப்பதும், எங்கும் சுலபமாகக் கிடைக்கக்கூடியதும்

ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே!

உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளியுங்கள்!

தயாரிப்பாளரும் விநியோகத்தர்களும்:

# யானை பீடி கம்பெனி,

130, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

தொலைபேசி: 31651.

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. பதிவு இலக்கம்:கியூ பி—934

முயல் மார்க் நூலுக்கு... ஜே!
முயல் மார்க் நூலுக்கு... ஜே!

நூல் தேர்தலில்
வெற்றி பெற்றது
முயல் மார்க் நூலே!



வானவில் வர்ணங்களில்
வகைவகையான
"முயல் மார்க்"
தையல் நூல்களை எங்கும்
பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பாளர்கள்:

**சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,**

கொழும்பு-12




101/4 சென் பெனடிக்ஸ் வீதி, கொழும்பு-13ல் உள்ள சி. சிவ ஞானசுந்தரம் அவர்களால் 194 ஏ, பண்டாரநாயகா வீதியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அட்டை, இல 27 பீர்சாய்பு வீதி. கொழும்பு-12ல் உள்ள எம்.ஜி.எம் பிரிண்டிங் இண்டஸ்ரீஸில் அச்சிடப்பட்டது.